பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 29 செவ்வாய்க்கிழமை (15.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 354

## வாக்களிப்பதை முற்றாகத் தவிர்ப்போம்; பொது அமைப்புகள் ஒன்றுகூடிப் பிரகடனம்!

யாழ்ப்பாணம்,நவ.15

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் பௌத்த சிங்கள - தமிழின விரோதக் குட்டையில் ஒன்றாக ஊறிய மட்டைகள். இவர்களில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் அதனால் தமிழர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பதை முற்றாகத் தவிர்த்து தமிழரின் ஒற்றுமைப்பலத்தை வெளிப்படுத்த வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் குடாநாட்டிலுள்ள பொது அமைப்புகள் பலவும்இணைந்து கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றன.

மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் ஒன்று கூடி இது தொடர்பான பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர். அந்தப் பிரகடனத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் எனக்கோரும் பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தலைப் புறக்கணித்து தேர்தல் தினத்தை துக்கதினமாக - கரிநாளாக அனுஷ்டிக்குமாறும் அந்தப் பிரகடனத்தில் கோரப்பட்டிருக்கிறது. ஏதாவது தவிர்க்கமுடியாத காரணத்தினால் வாக்களிக்கச் செல்ல நேரிட்டால், அங்கு சென்று வாக்குச்சீட்டுக்களைச் செல்லுபடியற்றதாக்குமாறும் தமிழ்மக்களிடம் அந்தப் பிரகடனம் கேட்டிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இரண்டு பிரதான கட்சியைச் சார்ந்தவர்களும் தமிழின நிலைப்பாடுடைய பேரினவாதிகள்தான். காலம்காலமாகச் சந்தித்த அழிவுகள் கற்றுத் தந்த பாடங்கள் இவை. மகிந்த வெளிப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### பொது அமைப்புகளின் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.15

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை தமிழ்மக்கள் முற்றாகத் தவிர்க்கவேண்டும் எனக் கோரும் பிரகடனம் ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்கள் இணைந்து இந்தப் பிரகடனத்தை வெளியிட்டன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நேற்று மாலை 4 (16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவை ஆதரிக்க கோருகிறார் கருணா!

### புலிகளிடமிருந்து தாம் பிரிந்தமைக்கு ரணில் காரணமல்ல என்றும் கூறுகிறார்

கொழும்பு, நவம்பர்.15

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதி வேட்பாளரும், தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவையே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் ஆதரிக்க வேண்டும். தேர்தலைப் பகிஷ்கரிக்காமல் தமிழர்கள் மஹிந்த ராஜபக்ஷவிற்கே வாக்களிக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டுள்ள விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா.

லண்டனிலிருந்து இயங்கும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர் வழங்கிய பேட்டி நேற்று 'ஏஷியன் ரிபியூன்' இணையத்தளத்தில் வெளிவந்திருந்தது. அதிலேயே அவர் இவ்வாறு கோரியிருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாற்றியமைக்கப் போகிறார் என மஹிந்த கூறியிருக்கிறார். இதுவும் எமக்கு முக்கியமான (16ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் பகிஷ்கரிப்பு சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.15

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரி வலி.மேற்கில் பல பகுதிகளிலும் நேற்றிரவு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

'தமிழருக்கென் ஒரு தலைமை உண்டு.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வர்த்தகர் கொலை

கொழும்பு,நவ.15

அம்பலாங்கொடையில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## படைகளை விட்டு ஓடியோரைத்திரட்டி வடக்கில் வாக்கு மோசடிக்குத் திட்டம்

### ஈ.பி.டி.பியுடன் இணைந்து சதி என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,நவ.15

வாக்கு மோசடிகள் மற்றும் வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசு யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றத் திட்டமிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காகப் பாதுகாப்புப் படையில் இருந்து விலகிய 300 பேரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்கள் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடன் இணைந்து இந்த வாக்கு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு வாக்கு எண்ணும் இடங்களில் இடமில்லை

கொழும்பு,நவ.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குகளை எண்ணும் நிலையங்களில் உள்ளூர் கண்காணிப்பாளர்களை அனுமதிப்பதில்லையென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இங்கு வந்துள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள், வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களை அவதானிக்கவும், தேர்தல் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்குள் செல்வதற்கும் அனுமதிக்கப்படுவார்களென்று தேர்தல் திணைக்களத்தின்

(16ஆம் பக்கம் பார்க்க)

### கடைசி நேரக் கருத்துக் கணிப்பு முடிவு இது!

## வடக்கு - கிழக்கு வாக்குகள் இல்லாமலேயே ரணிலுக்கு-52.85%; மஹிந்தவுக்கு-47.15%

கொழும்பு,நவ.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளர் வெற்றிபெறுவார் எனப் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் சங்கம் நடத்திய - மக்கள் மீத்தியிலான - கருத்துக் கணிப்பின்படி, ஐ.தே.கவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே முதலிடத்தில் இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் சார்பில் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் டபிள்யூ. எம். கருணதாஸ, றுகுணு பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் அரசறிவியல் விரிவுரை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் பிரசாரக் கூட்டத்தை கைவிட்டார் பிரதமர் மஹிந்த

### பாதுகாப்புக் காரணங்களுக்காகவாம்

கொழும்பு,நவ.15

கொழும்பு பொரளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இராணுவ அங்கி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அந்தக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பொரளையில் கெம்பல் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் இறுதித் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்ற திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் அவர் பாதுகாப்பு காரணங்களுக்காகக் கலந்துகொள்ளவில்லை.

பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அப்பகுதியில் இராணுவச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 389 முறைப்பாடுகள்

கொழும்பு,நவ.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை, தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 389 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் நேற்று அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் நேற்று ஊடகக் குறிப்பொன்றை வெளியிட்டிருக்கும் மேற்படி நிலையம் அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தலா 164 தேர்தல் கண்காணிப்பாளர்களை சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 3 பொலீஸாருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, நவ.15

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்தனர் என்று கூறப்படும் மூன்று பொலீஸாரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு தமிழீழநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவர்கள் தொடர்பான விடயம் நேற்று கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொலீஸார் ஊடுருவித் தாக்கும் நோக்குடனே எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் தமது விசாரணைகளிலிருந்து தெரிய

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தல் பகிஷ்கரிப்பு முடிவுக்கு ஆதரவு மென்மேலும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் தமிழர் தரப்பின் முடிவுக்கு பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள், சமூக நிறுவனங்கள் எனப் பலதரப்புகளிலிருந்தும் ஆதரவு பெருகிவருகிறது. தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் அறிக்கைகளை அவை வெளியிட்டு வருகின்றன. அந்த வகையில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீ லங்காவின் 5 ஆவது ஜனாதிபதித் தேர்தல் தமிழர் தாயக மக்களுக்கு ஒரு பொறியாகவே அமைந்துள்ளது. இத்தேர்தலில் தாயக மக்கள் வாக்களித்தால் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையினூடாக தமது பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென அவர்கள் கருதுகிறார்கள் எனப் பொருள் கொள்ளப்படும் பேரபாயம் உள்ளது. இந்தப் பேரபாயத்தைத் தவிர்ப்பதற்கு - உள்ள ஒரே வழி தேர்தல் பகிஷ்கரிப்பு மட்டுமேயாகும்.

தாயகப் பிரதேசத்து மக்கள் தமது அனுபவ வெளிப்பாட்டின் ஊடாக உருவாக்கியுள்ள கருத்தே தேர்தல் பகிஷ்காரம் என்பதாகும். மக்களுடைய கருத்தை சரியான வகையில் வெளிப்படுத்துவதே ஜனநாயகம் ஆகும். எனவே தேர்தல் பகிஷ்கார நடவடிக்கை ஒரு ஜனநாயக செயன்முறையாகும்.

வாக்குச் சீட்டில் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளே உள்ள நிலையில் அதற்குமப்பால் சென்று ஒரு உன்னதமான தெரிவை தமது அரசியல் விழிப்புணர்வின் அடிப்படையில் இம்மக்கள் மேற்கொண்டுள்ளார்கள். அதுவே தேர்தல் பகிஷ்காரமாகும்.

வாக்கைச் செலுத்தாமல்விடும் உரிமையும் வாக்குரிமையில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் அரசியல் விழிப்புணர்வின் அடிப்படையில் வாக்களிக்காது விடும் உரிமையைப் பிரயோகிப்பதைத் தவறெனக் கூறுபவர்கள் ஜனநாயக விரோதிகள் ஆவார்கள்.

தமிழ் தாயக மக்களின் வாழ்வுரிமையைப் பறித்தவர்கள் - இன்றும் வழங்க மறுப்பவர்கள் - அதே மக்களின் வாக்குகளைக் கோரி நிற்பது வேடிக்கையானதும் வேதனையானதுமாகும்.

இதைத் தவிர தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரி தமிழர் தாயகத்தின் பல்வேறு அமைப்புகளும் அறை கூவல் விடுத்துள்ளன. அவ்வாறு அறிக்கைகள் விடுத்துள்ள அமைப்புகளில் சில வருமாறு:-

கிளிநொச்சி சமூக கலை இலக்கியப் பங்காளிகளுக்கான அமைப்பு, வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்.மாவட்ட வெண்மை வாணிப சங்கங்களின் ஒன்றியம், யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலி.தென்மேற்கு எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழகம், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம், புங்குடுதீவு பொது அமைப்புகளின் ஒன்றியம், பருத்தித்துறை சாலை போக்குவரத்து ஊழியர் சங்கம், தீவகக் கோட்ட அன்னையர் முன்னணி ஒன்றியம் ஆகியனவும் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ் மக்களைக் கோரியுள்ளன. (ஒ-13)

## தேர்தல் பணியில் கைத்தொலைபேசி முற்றாகத் தடை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கடமைக்குத் தெரிவுசெய்யப்பட்டு தமது பணியினை ஆற்ற உள்ளவர்கள் தமது கடமை நேரத்தில் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தக் கூடாது என யாழ்.தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதே நேரத்தில் வாக்குச் சீட்டுக்களை எண்ணும் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்களும் நேற்று உரிய அலுவலர்களது அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-51)

## வண்ணை ம.வியில் இன்று பேச்சுப்போட்டி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ்.சைவ பரிபாலன சபை நடத்தும் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் இன்று வண்ணை நாவலர் மகா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

பேச்சுப் போட்டிகள் காலை 9 மணிக்கும், கட்டுரைப் போட்டிகள் பிற்பகல் ஒரு மணிக்கும் நடைபெறும். இந்தப் போட்டிகளில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பங்குகொள்கின்றனர் என சைவபரிபாலன சபையின் தலைவர் சைவப்புலவர் க.கந்தசாமி தெரிவித்தார்.

## 'ஹலோ ரெஸ்ட்' அலுவலகம் முன்பாக அதன் பணியாளர்கள் நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,நவ.15

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹலோ ரெஸ்ட்' நிறுவன அலுவலகம் முன்பாக, அந்த நிறுவனத்தின் மிதிவெடியகற்றும் பணியாளர்கள் நேற்றுக் காலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிறுவனத்தின் ஒழுங்கு நடைமுறைகளை மீறி முரணான விதத்தில் செயற்பட்டனர் என்று தெரிவித்து ஊழியர்கள் நால்வர் 'ஹலோ ரெஸ்ட்' நிறுவன நிர்வாகத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை நீக்கம் செய்யப்பட்ட நான்கு ஊழியர்களும் நேற்றுக் காலை 'ஹலோ ரெஸ்ட்' நிறுவன வாயிலை மூடி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை பணிக்குக் காலையில் வந்த ஏனைய பணியாளர்கள் அவர்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அலுவலகத்திற்குள் எவரும் செல்லவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ முடியவில்லை.

இதனால் நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் நேற்றுக் காலை முதல் முடக்கப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் 'ஹலோ ரெஸ்ட்' நிறுவன நிர்வாகத்துக்கு எதிரான சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினார்கள்.

போராட்டம் நடைபெற்ற இடத்தில் பெருமளவு கலகம் அடக்கும் பொலீஸார் குவிந்தனர். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் பொலீஸாரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்துப் பொலீஸார் அங்கிருந்து அகன்றனர்.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடினார்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட நான்கு ஊழியர்களும் எவ்வித நிபந்தனைகளுமின்றி மீண்டும் வேலையில் இணைத்துக்கொள்ளப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என ஊழியர்கள் தெரிவித்தனர். (ஒ-8-7-173)

## திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பெண்கள் உட்பட ஐவருக்கு சிறை

வீடொன்றுக்குள் அத்து மீறி நுழைந்தமை, 51 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் களவாடியமை ஆகிய குற்றச் சாட்டுகளின் பேரில் மூவருக்கு யாழ்.நீதிமன்றம் 2 வருடங்களுக்கு ஒத்திவைத்த தலா ஆறு மாதம் சாதாரண சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

கொண்டலடி வீதி, நல்லூரைச் சேர்ந்த மகாதேவன் மகேந்திரன், ஜெயமோகன் எடின் பரோ, பொன்னம்பலம் ஆகியோருக்கே யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்தத் தண்டனையை விதித்தார்.

இதேவேளை -

பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரின் 67 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மதவாச்சியைச் சேர்ந்த பியசேன ஜெயலதா, கிருஷ்ணன் தேவிகா ஆகியோருக்கு ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 3 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இத்தண்டனையை விதித்தார்.(ஒ-8-7)

## தேர்தல் பணிக்கு 70 பஸ்கள்

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குப் பெட்டிகளைக் கொண்டு செல்வதற்குத் தேவையான பஸ்களைத் தந்துதவுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய அலுவலகத்தைக் கோரியுள்ளார். அரச அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களை வழங்க போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (ஒ-154)

## பிலிப்பைன்ஸில் மோதல்

ஜாம்பேஸ்கா,நவ.15

பிலிப்பைன்ஸ் நாட்டில் தீவிரவாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த கடும் சண்டையில் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் உள்ள இந்தனான் என்ற பகுதியில் பிலிப்பைன்ஸ் இராணுவ ரோந்து அணிமீது அபு-சாயிப் தீவிரவாதிகள் வழிமறித்துத்தாக்குதல் நடத்தினர். அதனைத் தொடர்ந்து கடும் சண்டை மூண்டது. இந்தப் பெரும் சண்டையில் 4 இராணுவத்தினரும் 16தீவிரவாதிகளும் உயிரிழந்தனர் என பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். கடும் மழை தொடர்ந்ததையடுத்து இராணுவத்தினர் தமது தளம் திரும்பினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்தியாவில் சிறையை உடைத்து சகாக்களை மீட்டனர் தீவிரவாதிகள்

ஜகானாபாத், நவ.15

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் உள்ள ஜகானாபாத் என்ற நகரில் உள்ள சிறைச்சாலைக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த நக்சலைட் தீவிரவாதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 350 கைதிகளை மீட்டுச்சென்றுள்ளனர்.

இந்தப்பெரும் சிறைமீட்பு நடவடிக்கையின்போது தீவிரவாதிகளால் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் பீகார் மாநிலத்தின் சட்டசபைக்கான தேர்தலின் 3ஆம் கட்ட வாக்குப்பதிவு இடம்பெற்றது. தேர்தல் நடவடிக்கைகளை தீவிரவாதிகள் குழப்பலாம் என்ற அச்சம் நிலவியதால் பெருமளவு பொலீஸாரும், துணை இராணுவத்தினரும் தேர்தல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இரவு 9 மணியளவில் பொலீஸ் சீருடை தரித்த ஆயிரம் நக்சலைட் தீவிரவாதிகள் ஜகானாபாத் நகரினுள் நுழைந்தனர். ஒலிபெருக்கிகள் மூலம் பொதுமக்களை வெளியே வரவேண்டாம் எனத் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஜகானாபாத் சிறைச்சாலை தீவிரவாதிகளால் முற்றுகையிடப்பட்டது. அதிரடியாக சிறையினுள் நுழைந்த அவர்கள் அங்கிருந்து 350 பேரை மீட்டுச் சென்றனர். இவர்களில் 20பேர் நக்சலைட் தீவிரவாதிகளுக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

சிறையில் அடை[illegible]கப்பட்டிருந்த நிலப் பிரபுக்கள் அமைப்பி[illegible] தலைவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். மேலும் சிறைக்காவலாளி உட்பட 4பேரை அவர்கள் சுட்டுக் கொன்றனர். சிறை முற்றுகையை அடுத்து நகரில் இருந்த பொலீஸ் விடுதி, பொலீஸ்

ஜகானாபாத் சிறைச்சாலை



தலைமையகம் ஆகியவற்றின் மீதும் கடும் தாக்குதலை அவர்கள் மேற்கொண்டனர்.

சிறைக்குள் நக்சலைட் தீவிரவாதிகள் துண்டுப்பிரசுரங்களை விட்டுச் சென்றுள்ளனர். அதில், நவம்பர் 13 ரஷ்ய புரட்சியை நினைவுகூரும் முகமாக இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிறையில் இருக்கும் எமது உறுப்பினர்களை மீட்பதுடன் எமது எதிர் அமைப்பு உறுப்பினர்களுக்கு மரணதண்டனை வழங்குவதுமே நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இஸ்லாமியர்களுக்கு எதிரானவர்களின் பட்டியலில் பிரிட்டிஷ் ராணிக்கும் இடம்

### அல்-கெய்டா அறிவிப்பு

லண்டன்,நவ.15

இஸ்லாமியர்களுக்கு எதிராக உள்ள முக்கிய பிரமுகர்களில் பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத்தும் ஒருவர் என அல்-குவைதா அறிவித்துள்ளது.

லண்டனில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளை நியாயப்படுத்தி அல்-குவைதா அமைப்பைச் சேர்ந்த அல்-ஜவாகிரி பேசிய வீடியோக் காட்சி அல்-ஜெஸீரா தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

அதில் அவர் பேசிய விவரம் வருமாறு:-

பிரிட்டனின் கடுமையான சட்டங்களுக்கு ராணி எலிஸபெத் அவர்களே காரணம். அவர் இஸ்லாமியர்களுக்கு எதிராக உள்ள முக்கிய பிரமுகர்களில் ஒருவர் ஆவார்.

அவருக்கு விசுவாசமாகப் பணிபுரிய நினைக்கும் பிரிட்டனைச் சேர்ந்த இஸ்லாமியத் தலைவர்களை எச்சரிக்கிறேன்.

பிரிட்டனிலுள்ள இஸ்லாமிய சபை, மசூதிகளுக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அதில், தீவிரவாதிகள் பற்றி யார்மீதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உடனே தெரிவிக்கும்படி கூறியுள்ளது. உத்தரவு பிறப்பிக்க இவர்கள் யார்? என்ற கேள்வியோடு ஜவாகிரி அதில் தெரிவித்திருந்தார்.

இது குறித்து பிரிட்டன் பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்:-

உலக அரங்கில்

ஜவாகிரி பேசினார் என வெளியிடப்பட்ட வீடியோவில் சில குறிப்பிட்ட பகுதிகள் ஒளிபரப்பப்படவில்லை என்பது தெரியும். அமெரிக்காவின் இரட்டைக்கோபுரத் தாக்குதலுக்குப் பின்பு ராணி எலிசபெத்துக்கு அதிகபட்சப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.

அல்குவைதா அமைப்பின் இந்த மிரட்டலைத் தொடர்ந்து ராணியின் பக்கிங்ஹாம் அரண்மனையின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு புலனாய்வுத் துறை உஷார்படுத்தியுள்ளது. - எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாக். பூகம்பம் பாதித்த பகுதிகளில் சிறுவர்களைக் கடத்தி சிறுநீரக விற்பனை

முசாபராபாத்,நவ.15

பாகிஸ்தானில் பூகம்ப பகுதிகளில் உள்ள சிறுவர்களைக் கடத்தி, சிறுநீரகத்தை எடுத்து விற்பனை செய்யப்படுகிறது. அதற்கு பாகிஸ்தான் இராணுவமும் உடந்தையாக உள்ளது என சில உதவி அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் இஸ்லாமாபாத், பெஷாவார் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள முசாபராபாத் ஆகிய பகுதிகளில் 80 ஆயிரம் பேர்வரை பயாகிவிட்டனர். 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

உதவி அமைப்பு ஒன்று வெளியிட்ட தகவலில் முசாபராபாத்தில் பூகம்பத்தில் காயம் அடைந்தவர்கள், பலியானவர்களின் உடல்களையும் அங்குள்ள சில குழுக்கள் கடத்தி விற்பனை செய்துள்ளன.

அவர்களிடம் இருந்து சிறுநீரகம், கண், ஈரல் போன்ற உடல் பாகங்களையும் எடுத்து விற்பனை செய்துவருகின்றனர். சிறுவர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.

இந்த நடவடிக்கைக்கு பாகிஸ்தான் இராணுவத்தினர் உடந்தையாக இருந்தனர் என அதில் புகார் கூறப்பட்டுள்ளது.

இது தவிர, அகதி முகாம்களில் தங்கி இருந்த சிறுவர்கள் மற்றும் பெண்களையும் கடத்தி தீவிரவாத அமைப்புகளில் சேர்த்து ஆயுதப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பந்து இப்போது தெற்கின் களத்தில்!

இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்களிப்புக்கு ஆக இன்னும் 48 மணித்தியாலங்களே உள்ளன. தேர்தல் பிரசாரம் இன்று அதிகாலையுடன் முடிவுக்கு வந்துவிட்டது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலில் பங்குபற்றும் ஈடுபாடும்,அக்கறையும் அவர்களிடம் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டு விட்டது.

ஆக, இந்த ஓட்டப் பந்தயத்தில் ('ரேஸில்') வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கப் போகின்றவர்கள் தென்னிலங்கை மக்களே. அந்தப் பொறுப்பு அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த இலங்கைத் தீவு பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஐம்பத்தியேழு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால், இன்றுவரை இந்த நாட்டை ஆண்ட சிங்களத் தலைமைகள் பேரினவாத சிந்தனைச் சகதிக்குள் இருந்து இன்னும் வெளியேவரவேயில்லை என்பது துலாம்பரமாகத் தெரிகின்ற விடயம். தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை யதார்த்த பூர்வமான புறநிலை நோக்குடன் அணுகித் தீர்க்கும் மனப்பக்குவத்தை சிங்களத் தலைமைகள் அடையவே இல்லை என்பதை நாம் காண்கிறோம்.

அடக்கு முறையாலும், ஆயுத பலத்தாலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்ற கனவுலகில் சஞ்சரித்தபடி ஐந்து தசாப்த காலத்தை ஓட்டிய சிங்களத் தலைமைகள் இப்போது, வாங்கிக் கட்டிய பட்டறிவு காரணமாக தமது சுருதியைச் சற்று மாற்றிக் கொண்டிருக்கின்றன.

'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' என்று முழங்கிய தென்னிலங்கைத் தலைமைகள் 'பேச்சு மூலம் அமைதித் தீர்வு' என்று வெளிப்படையாகவேனும் கீழிறங்கி வந்து கூறுவதற்குக் காரணம் இந்தப் பட்டறிவு தான்.

ஆனாலும், அந்தப் பட்டறிவுப் பாடத்தின் பின்னரும் சிங்களத் தலைமைகளின் உள்நோக்க மையக் கருத்தில் மாற்றம் ஏற்படவில்லை; மேலாண்மைப் போக்குடைய பேரினவாதச் சிந்தனை மாறவேயில்லை.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு என்ற பேச்சு. போரின் பயத்தால் எழுந்த ஒன்றேதவிர , தென்னிலங்கைத் தலைமைகளின் அடிமனதில் எழுந்த அடிப்படை மாற்றத்தால் வந்தது அல்ல. ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக ஐந்து தசாப்த காலமாக அவர்கள் மூட்டி, வளர்த்த பேரினவாதச் சிந்தனை என்ற தீ தென்னிலங்கையில் கொழுந்து விட்டெரிகிறது. அதற்கு நடுவே நியாயத்தை எடுத்துரைத்து, நீதியான தீர்வு இதுதான் என்று முன் வைக்கும் திடசங்கற்பமும், பற்றுறுதியும் எந்தத் தென்னிலங்கைத் தலைமையிடமும் கிடையாது.

அதனால்தான் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற நாட்டை ஆட்டிப்படைக்கும் உயர்பதவிக்கான தேர்தலின் போது கூட, நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தமது தீர்வு இதுதான் என்று திட்ட வட்டமாக - தெளிவாக - கெட்டியாக - வெளிப்படையாக - ஒரு யோசனைத் திட்டத்தை முன்வைக்கும் 'முதுகெலும்பு' சிங்களத் தலைமைகளிடம் இருந்து வெளிப்படவேயில்லை. ஏதேதோ வார்த்தை ஜாலங்கள் மூலம் அவர்கள் 'ஒளித்துப் பிடித்து' விளையாடுகிறார்களே தவிர, தெளிவான சிந்தனைத் திட்டத்தோடு மக்கள் முன்வருகிறார்கள் இல்லை.

எது எப்படியென்றாலும் தென்னிலங்கையில் இத் தேர்தல் தமிழரின் தேசியப் பிரச்சினை, விடுதலைப் புலிகளின் உரிமைக்குரல் போன்றவற்றை மையமாக வைத்தே நடக்கின்றது. அதை வைத்தே தென்னிலங்கை இம்முறை தனது வாக்குரிமையைப் பிரயோகிக்கப் போகிறது. அப்படி அந்த உரிமையைப் பிரயோகிக்க முன்னர் யதார்த்த நிலையை தென்னிலங்கை மக்கள் ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

தமிழர் தாயக மக்களைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல என்று ஆகிவிட்டது. ஆனால், தென்னிலங்கை மக்களைப் பொறுத்தவரையில் இது அவர்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கப் போகும் ஒரு நிகழ்வு. இந்தத் தீவின் மற்றறொரு தேசிய இனமான தமிழ் இனத்தோடும் முஸ்லிம்களோடும் அதிகாரத்தைப் பகிர்ந்து,விட்டுக்கொடுத்து, அமைதி மற்றும் சமாதானத்துடன் வாழப் போகின்றோமா அல்லது தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துவது போல மீண்டும் ஒரு முறை நடந்து கொள்ளப் போகின்றோமா என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.

தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றாமல் இத்தீவில் சமாதானமும், இன ஒத்திசைவும், இணக்கமும், பொருளாதார மேம்பாடும் ஏற்படப்போவதில்லை என்ற யதார்த்தத்தைப் பெரும்பான்மைச் சிங்களவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டம் இது . அதை மறுத்து, மறந்து, வெறும் உணர்ச்சியைக் கிளப்பும் பேரினவாதக் கிளர்ச்சிக்கு அவர்கள் எடுபடுவார்களேயானால் இத்தீவுக்கு மீட்சியே இல்லை.

இந்தத் தேர்தலை பொருட்படுத்தாமல் புறக்கணிக்கும் தமிழர் தாயக மக்களின் ஆதங்கத்தையும் -

வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மை இனங்களின் உள்ளக் கிடக்கையும் -

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கைத் தீவின் அரசியல் , இராணுவ, பொருளாதார சமநிலைப் போக்கின் திசையையும் -

கவனத்தில் எடுத்து தென்னிலங்கை மக்கள் சரியான முடிவைத் தீர்மானிக்க வேண்டும். பந்து இப்போது அவர்களின் களத்தில். பிழையாக விளையாடினால் மீள முடியாத பின்னடைவு அவர்களுக்கு நிச்சயம். புரிந்துகொள்ள வேண்டியவர்கள் அவர்கள் தாம்.

# ஆழிக்குமரன் ஆனந்தனுக்குச் சிலை வல்வை ஊறணியில் நிறுவ ஏற்பாடு

கரவெட்டி, நவ.15

கின்னஸ்ஸில் சாதனை பதித்த ஈழத்தின் நீச்சல் வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு வடமராட்சியில் சிலை நிறுவப்படவுள்ளது.

விவேகானந்தன் ஆனந்தன் என்ற ஆழிக்குமரன் ஆனந்தனின் 63ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் சிலை நிறுவ ஏற்பாடாகியுள்ளது.

வல்வை மக்களால் வல்வை ஊறணி தீர்த்தக் கரை ஓரத்தில் இந்தச் சிலை நிறுவப்படும்.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் சிலையைத் திறந்துவைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஆழிக்குமரனின் சிராார்த்த தினமாகும். அன்று சிலைத் திறப்பு விழாவும் சிறப்பு மலர் வெளியீட்டையும் நடத்த ஏற்பாட்டுக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இந்தச் சிலையை நிறுவும் பொறுப்பு சிற்பி இராஜன் என்பவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை - ஆழிக்குமரன் பற்றிய ஆவணங்களை உள்ளடக்கிய வரலாற்று ஆவண மலரைத் தயாரிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆழிக்குமரன் ஆனந்தன் தொடர்பான வரலாற்றுக் கட்டுரைகள், புகைப் படங்கள் இருப்பின் அவற்றைத் தந்து உதவுமாறு மலர் அமைப்புக் குழு கேட்டுள்ளது.

இத்தகைய ஆவணங்களை 'ஆழிக்குமரன் ஞாபகார்த்த செயற்பாட்டுக் குழு' எஸ்.சக்திவேல், இணைப்பாளர், ஊறணி, வல்வெட்டித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)

# கொழும்புத்துறை, ஈச்சமோட்டை பகுதிகளில் குளங்கள் நிரம்பின

தற்போது பெய்துவரும் கன மழையினால் கொழும்புத்துறை, ஈச்சமோட்டைப் பகுதிகளில் உள்ள குளங்கள் வெள்ளம் நிரம்பியுள்ளது. குளங்களை மேவியும் வெள்ளம் ஓடுவதால் இப்பிரதேசத்தில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஈச்சமோட்டையில் உள்ள டோபி குளம், மறவன்குளம், பால்குளம் மற்றும் கொழும்புத்துறையில் உள்ள இலந் தைக்குளம் என்பன வெள்ளம் நிரம்பி ஓடுவதால் குளங்களை அண்டி வாழும் குடும்பங்கள் பெரும் சிரமங்களைச் சந்திக்கவேண்டியுள்ளது.

இந்தக் குளங்களில் தேங்கும் மழை நீர் கடலுக்கு வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட வடிகால்வாய்கள் துப்புரவு செய்யப்படாததாலேயே குளங்களில் வெள்ளம் நிரம்பி மக்களில் குடியிருப்புகளுக்குள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

தொடர்ந்தும் பலத்த மழை பெய்தால் இந்தக் குளங்களை அண்டி வாழும் குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# அபகரிக்கப்பட்ட வாக்கு அட்டைகளோடு வருவோர்களை விசாரிக்க அறிவுறுத்தல்

## மோசடியைத் தவிர்க்க இந்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.15

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்ட சமயம் அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளைப் பயன்படுத்தி எவராவது வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தந்து வாக்களிக்க முயன்றால் அவர்களை உரியமுறையில் விசாரணை செய்து வாக்கு மோசடியைத் தடுக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான கே.கணேஷ் வாக்களிப்பு நிலைய சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் குடாநாட்டில் இனந்தெரியாதவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளின் விவரங்கள் சம்பந்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே, சந்தேகத்திற்கிடமான வாக்காளர் அட்டைகளுடன் யாராவது வாக்களிக்க வருகைதரும் போது வாக்களிப்பு நிலையங்களில் உள்ள சிரேஷ்ட அலுவலர்கள் அதனை அவதானித்து உரியமுறையில் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மோசடிகளைத் தவிர்க்கவேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.(ஐ-203)

# சிறுவர் உரிமைகள் தொடர்பாக தீவகத்தில் விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.15

தீவக வலயக் கல்வி அலுவலகம் சிறுவர் உரிமை, அதனை மீறும் செயற்பாடு என்பன தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ள வீடியோப் படக் காட்சியை 12 கிராமங்களில் காண்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்கண்டு அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்களை வீடுவீடாகச் சந்தித்தல், பாடசாலை செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து விளக்குதல், பிள்ளைகள் மன அழுத்தத்திற்கு உட்படாதிருத்தலை உறுதி செய்தல், பிள்ளைகளின் அடிப்படை உரிமை கல்வி என்பதை விளக்கல், பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தல், சிறுவர் உரிமை மீறல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்தில் ஊரி, பாலவோடை, களபூமி, தோப்புக்காடு ஆகிய கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதன்போது பாடசாலை செல்லாத 15 பிள்ளைகள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மாலை நேர வகுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி காரை. சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

வேலணைப் பிரதேசத்தில் மண்கும்பான், அல்லைப்பிட்டி, துறையூர், கண்ணாபுரம், வேலணை மேற்கு, அம்பிகை நகர் ஆகிய இடங்களிலும் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் நாரந்தனை வடக்கு, தம்பாட்டி, ஊர்காவற்றுறை மையப் பகுதி, கரம்பொன் கிழக்கு, கரம்பொன் மேற்கு ஆகிய இடங்களில் வாழும் பெற்றோர்களுக்கு வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்பட்டு விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன. (3-202)

## பூரணை தினவிழா

யாழ்ப்பாணம்,நவ.15

கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் கார்த்திகை பூரணை தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 'நல்லொழுக்கத்துடன் வாழ்ந்திடுவோம்' என்னும் தலைப்பில் ஆச்சிரமப் பொருளாளர் க.தெய்வேந்திரம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து கண்காட்சி, வீடியோப் படக்காட்சி என்பன இடம் பெறும். (3-202)

## நாளை

கார்த்திகை 01
புதன்கிழமை
16.11.2005
திதி: பூரணை
முற்பகல் : 06.38
நட்சத்திரம்: கார்த்திகை
பிற்பகல் : 01.42 வரை
சுபநேரம்: 04.37 - 06.07
ராகுகாலம்: 12.07 - 01.37
(யாவும் பழைய நேரப்படி)

# வலி.மேற்கில் சிறகுவலை பயன்படுத்தும் மீனவருக்கு ரூ.30 லட்சம் செலவில் வலைகள்

வலி.மேற்கு,நவ.15

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வலி.மேற்கு கடற்றொழிலாளர்களுக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சுழிபுரம், அராலி, மூளாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறகுவலை (களங்கண்டி) மீன்பிடித் தொழிலாளர்களுக்கே இந்த மீன்பிடிவலைகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 30 கடற்றொழிலாளர்களுக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான சிறகுவலைகளும் -

மூளாய் நாராயணன் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 9 கடற்றொழிலாளர்களுக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறகு வலைகளும் -

அராலி ஐயனார் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 10 கடற்றொழிலாளர்களுக்கு ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறகுவலைகளும் -

அராலி வேலவன் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 14 கடற்றொழிலாளர்களுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சிறகுவலைகளும் -

காட்டுப்புலம் கெங்காதேவி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 20 கடற்றொழிலாளர்களுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான சிறகுவலைகளும் இவ்வாறு வழங்கப்படவுள்ளன. (எ-175)

## அளவெட்டிப் பகுதியில்

# கண்ணி மீட்கப்பட்ட பிரதேசம் உரியவர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.15

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அளவெட்டிப் பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட இரு பிரதேசங்கள் கடந்த வாரம் கையளிக்கப்பட்டுள்ளன.

அளவெட்டி தபால் அலுவலகத்திற்கு அண்மையில் இரண்டாயிரதது 24 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசத்தில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் 10 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு அருகில் 3ஆயிரத்து 374 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசத்திலும் மிதிவெடிகள் அகற்றப்பட்டன.

அகற்றப்பட்ட இரு பிரதேசங்களும் மிதிவெடி அகற்றும் பிரிவின் யாழ். அலுவலகத்தால் தெல்லிப்பழை பிரதேச செயலர் ஊடாகப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (3-14)


## உதயவாக்கு

இயற்கை வெளிச்சத்தில்தான் ஒரு முத்தின் நிறத்தையும் அழகையும் பரிசோதிக்கவேண்டும். அப்போது தான் அதன் உண்மைத் தன்மை விளங்கும். - ஓர் அறிஞர்.

# தமிழ் மக்களே!

## நீங்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டியது ஏன்?

- ❖ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டு 20 வருடப்போருக்கு முடிவு கட்டியவர்.
- ❖ 10 வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 பாதையைத் திறக்க வழிவகுத்து பல சௌகரியங்களை ஏற்படுத்தியவர்.
- ❖ தமிழ் மக்கள் தமது பூமியில் சுதந்திரமாக நடமாடுவதற்கு கணிசமான அளவுக்கு உதவியவர்.
- ❖ தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கியவர் இவரே.
- ❖ சமஷ்டி முறையில் அதிகாரங்களைப் பகிர்வதே இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு என்று பிரகடனப்படுத்தி உள்ளவரும் ரணிலே!
- ❖ இருள் சூழ்ந்திருந்த வடபகுதிக்கு ஒளியூட்டியவர்.
- ❖ நிரந்தர சமாதானம் எட்டப்படாத போதிலும் தமிழ் மக்களின் வாழ்வில் ஓரளவுக்கேனும் நிம்மதியை ஏற்படுத்தியவர்.
- ❖ வடக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் பொலீஸ் பதிவு, சோதனைகள் என்பவற்றை நீக்கியவர் ரணிலே!
- ❖ தலைநகரில் அமைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகளை நீக்கி போக்குவரத்தைச் சீராக்கியவர். சோதனைகளுடன் வாழந்த தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைத்தவர்.



**நாட்டின் சமாதானம் சீர்பெறவும்**
**நிலைக்கவும் வழி செய்யக்கூடிய**
**ஒருவர் ரணில் மட்டுமே!**
**இம்முறை தெரிவு செய்யுங்கள்.**
**பெரும் நற்பயன்களை நிச்சயம்**
**பெறுவீர்கள்.**

ரணிலுக்கே
வாக்களியுங்கள்

# ரணில் விக்கிரமசிங்கா

ஐக்கிய தேசிய கட்சி

X

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் விடுதிகளில் மழை ஒழுக்கு; மக்கள் சிரமம்

புதுக்குடியிருப்பு,நவ.15

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் விடுதிகள் மழை காரணமாக ஒழுகுவதால் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் கூரைகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது உள்ளன.

மழைபெய்யும் போது ஒழுகுகின்றன. இதனால், வார்ட்டுகளில் நீர் தேங்கி நிற்கிறது. நோயாளர்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் விடுதிகளில் மழை பெய்யும்போது நடைபாதையில் அமைந்துள்ள பீலிகளில் நீர் வடிந்து வார்ட்டுகளுக்குள் வருகிறது.

இதனால் பெண்கள், சிறுவர்கள் துன்பப்படுவதும் மேலும் நோயாளிகளாக வாய்ப்பேற்படுகிறது.

தற்போது தொற்றுநோய்கள் ஏற்பட்டு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் சிகிச்சை பெறுவோரும் பெற வருவோரும் சிரமம் அடைவதைக் காணமுடிகிறது.

(3-353-204)

# மலசல கூடம் அமைக்க 'நிகொட்' உதவி

புளியங்குளம்,நவ.15

'நிகொட்' நிறுவனத்தின் மானியத் திட்டத்தின் கீழ் மருதோடை வெடிவைத்தகல் பகுதியில் 21 மலசல கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 'நிகொட்'நிறுவனம் ஒரு மலசல கூடத்திற்கு 6 ஆயிரம் ரூபாவை வழங்கியது.தமிழர் புனர்வாழ்வுக்கழக வவுனியாக்கிளை இத்திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

(3-355-202)

# வடக்கு - கிழக்கு கல்வி நிலை; செயலமர்வில் விரிவான ஆராய்வு

கிளிநொச்சி,நவ.15

தமிழீழக் கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்குக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம், வடக்கு -கிழக்கு கல்வியாளர்களை ஒருங்கிணைத்து தமிழ் கல்வி மேம்பாட்டுக்கான ஆய்வு ஆலோசனைச் செயலமர்வையும் கிளிநொச்சியில் நடத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனப் பயிற்சி மண்டபத்தில் ஆரம்பமான இச்செயலமர்வு நேற்றுமுன்தினம் வரை நடத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி ரீதியான தளர்வு ஏற்படுவதற்கான காரணங்கள் -

முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான கற்றல் மட்டங்களில் தளர்வு ஏற்படுவதற்கான காரணங்கள் -

மாணவர்களின் அடைவுகள்,பௌதீக வளப் பற்றாக்குறைகள் -

அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என்பவை குறித்து ஆராயப்பட்டன.

இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் கண்டறியப்பட்டன.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளை பாடசாலையூடாகவும் வலயக் கல்விப் பணிமனையூடாகவும் கல்வியமைச்சினூடாகவும் முன்னெடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

கல்விசார் பிரச்சினைகளுக்கு அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வளங்களைப் பெற்றுத் தீர்வுகாண்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு கல்வி மேம்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா அதன் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தேசிய கல்வி நிறுவன பாட இணைப்பாளர், யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழங்களின் விரிவுரையாளர்கள், கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் யோசப் உட்படப் பல கல்வியியலாளர்கள் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செயலமர்வில் கலந்துகொண்டவர்களுடன் கல்விசார் பிரச்சினை குறித்துக் கேட்டறிந்தார்.

(3-202)




# ஒரு லட்சம் மரநடுகைத் திட்டம் வன்னியில் பரவலாக ஆரம்பம்

புளியங்குளம்,நவ.15

தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் ஒரு லட்சம் மரங்களை நடுகை செய்யும் திட்டம் கடந்த 10 ஆம் திகதி கொக்காவில் 18ஆம் போர் ஏற்றப் பகுதியில் வைபவ ரீதியாக ஆரம்பிக் கப்பட்டது.

வன விழிப்புணர்வுப் பிரசாரத்திட்டத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சக்தி ஆரம்பித்து வைத்தார்.

குறித்த இடத்தில் மலைவேம்பு , வேம்பு, முதிரை, சமண்டலை, பாலை,வாகை,சவுக்கு, மரமுந்திரிகை ஆகிய மரவகைகளில் 8 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் வாரத்தில் முள்ளியவளையில் தேக்கு, மரமுந்திரிகை ஆகிய மரவகைகளில் 35 ஆயிரம் கன்றுகள் நடுகை செய்யப் படவுள்ளன.

(3-355-202)

# தேசிய சூழல் மேம்பாட்டு வாரம் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி,நவ.15

தமிழீழத் தேசிய சூழல் மேம்பாட்டு வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ளது என சூழல் நல்லாட்சி ஆணையகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ள சூழல் மேம்பாட்டு வாரத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கள், அரச திணைக்களங்கள், பிரதேச சபைகள் அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் உட்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோர் முக்கிய பங்காளிகளாகச் செயற்படுவர்.

இது தொடர்பாக ஆணையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**நோக்கம்**

★ சூழல் முன்னோடி தினத்தில் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை முழுமையாகச் செயற்படுத்தல்.

★ சீராக அகற்றப்படாமல் காணப்படும் கழிவுகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற கொடிய தொற்று நோய்களிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாத்தல்.

★ மரநடுகைகளை மேற்கொள்ளல்.

★ சகல மக்களிற்கும் சூழல் நடவடிக்கைகளையும் விழிப்புணர்வையும் வழங்குதல்.

**திண்மக் கழிவுகளை அகற்றல்**

★ பொலீத்தீன், பிளாஸ்ரிக், அஸ்பெஸ்டஸ், பற்றறி,இரும்புக் கழிவுகள், போத்தல்கள் போன்ற சூழலுக்கு ஒவ்வாத கழிவுப் பொருள்கள் அகற்றல்.

★ மாசடைந்த நீரைத் தேக்கி வைத்திருக்கும் பொருள்களை அகற்றுவதும் அவ்வாறான இடங்களைச் சுத்தம் செய்வதன் மூலம் தொற்று நோய்களைத் தடுத்தலும்.

★ கழிவு வாய்க்கால்களை நேர்த்தியாக்குவதன் மூலம் கழிவு நீரினால் ஏற்படக்கூடிய நோய்களையும் அசௌகரியங்களையும் தடுத்தல்.

★ கழிவு சேகரிப்பான்களை பொருத்தமான இடங்களில் வைத்தல்.

★ கண்ணாடித் துண்டங்கள், தகரங்கள் போன்ற கழிவுப் பொருள்களை அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தைத் தவிர்த்தல்.

**சிரமதானம் செய்தல்**

★ சம்பந்தப்பட்ட சகலரும் உட்பகுதிகளையும் சுற்றுப்புறப் பகுதிகளையும் அதனுடன் இணைந்த பகுதிகளையும் பாதையோரத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் திண்மக் கழிவுகளை அகற்றி பற்றைகளை வெட்டித் தூய்மையாக்கல்.

★ பாதைகள்,வாய்க்கால்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், பொதுமக்களைப் பயன்படுத்தி சிரமதானம் செய்தல்.

**மரநடுகை**

★ வீடுகள், வீதியோரங்கள், பொது இடங்கள் சகல இடங்களிற்குமான மரநடுகையை மேற்கொள்ளல்.

★ ஏற்கனவே நடப்பட்டு பராமரிப்பின்றி இருக்கும் மரக்கன்றுகளைப் பராமரிப்பதுடன் தேவையான இடங்களில் மரங்களைப் பாதுகாக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்தல்.

(3-202)

# 'தவளைப்பாய்ச்சல்' வெற்றி விழா பூநகரியில் எழுச்சியுடன் நடந்தது

கிளிநொச்சி,நவ.15

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்திய பூநகரியில் அமைந்த சிறிலங்காப் படைத்தளம் வெற்றி கொள்ளப்பட்ட 'தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கையின் 12 ஆம் ஆண்டு வெற்றி விழா பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

முழங்காவில் இந்து ஆலய ஒன்றியங்களின் தலைவர் குகேந்திரனின் தலைமையில் பூநகரி வாடியடிப் பகுதியில் இந்த வெற்றி விழா நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக்கொடியை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி செந்தாளன், கரும்புலி கோபியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை முதல் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணியின் தாயாரும் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணியும் -

கரும்புலி கணேஸின் திருவுருவப்படத்திற்கான சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத்தும் பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைமைந்தனும் ஏற்றினர்.

திருவுருவப் படங்களுக்கான மலர் மாலையை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அர்ச்சுதன், பூநகரி மீட்புச் சமரின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கான மலர் மாலையினை முழங்காவில் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் குகநாதன் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளை பூநகரிப் பிரதேச செயலர் ஸ்ரீஸ்கந்தகுமார், சமாசத் தலைவர், காவல்துறைப் பொறுபபாளர் குகநாதன் ஆகியோரும் -

நிகழ்வில் சிறப்புரையினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகமும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், சங்க நாதம் நிகழ்வு ,நவம் அறிவுக்கூடப் போராளிகளின் வில்லிசை நிகழ்வு என்பன இடம்பெற்றன.

(3-12)

# மழை காலத் தொற்று நோய்கள்; தடுக்கும் செயற்பாடுகள் தீவிரம்

கிளிநொச்சி,நவ.15

தமிழீழ சுகாதார சேவையினர் மழை காலத் தொற்றுநோயிலிருந்து பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வுகளை வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் பரவலாக நடத்திவருகின்றனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தமிழீழ சுகாதார சேவையினரின் விசேட நடமாடும் பிரிவினர் உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் உள்ளிட்ட 15 நிலையங்களையும் மற்றும் பொதுச்சந்தை, நகர்ப்பகுதி என்பனவற்றில் திடீர் பரிசோதனை மேற்கொண்டதுடன் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர். சந்தைப்பகுதி, நகர்ப்பகுதி வர்த்தகர்களுக்கு கருத்தரங்கையும் நடத்தினர்.

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்குப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சேரன் தொழிலக ஊழியர்கள் பணியாளர்கள் ஆகியோருக்கு கடந்த 9ஆம் திகதி தமிழீழ சுகாதார சேவையினர் டெங்குக் காய்ச்சல், மலேரியா தொடர்பான கருத்தூட்டல்களை வழங்கினர்.

கடந்த 10ஆம் திகதி போரூட்டின் வன்னிப் பிராந்திய அலுவலகத்திலும் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

(3-202)

# தமிழீழ சுகாதார சேவையினரால் காலாவதியான பொருள்கள் அழிப்பு

பூநகரி,நவ.15

பூநகரி, வாடியடிப் பகுதி வர்த்தக நிலையங்களிலும் ப.நோ.கூ.சங்கத்திலும் காலாவதியான பொருள்கள் தமிழீழ சுகாதார சேவையினரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட் டுள்ளது

காலாவதியான பால்மா, கிறேப்வோட்டர், குளுக்கோஸ் போன்ற பல பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்றும் இப்பொருள்களை விற்பது சுகாதாரத்தை பாதிக்கும் செயற்பாடு எனவும் தமிழீழ சுகாதார சேவையின் பூநகரி பிரதேச இணைப்பாளர் தெரிவித்தார்.

(3-403-202)

# சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகள் பூநகரி பிரதேசத்தில் முன்னெடுப்பு

பூநகரி,நவ.15

தமிழீழ சுகாதார சேவையினரும் பூநகரி சுகாதார சேவையினரும் இணைந்து பூநகரிப் பிரதேசத்தில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

கடந்த 10ஆம் திகதி பள்ளிக்குடா ஆரம்ப சுகாதார நிலையம், பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

வாய்ப்புற்றுநோய், பற் சுகாதாரம் , காசநோய், நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பூநகரிப் பிரதேச சபையின் அனுசரணையுடன் விழிப்புணர்வுப் பதாகைகள் அமைக்கப்படவுள்ளன என தமிழீழ சுகாதார சேவையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் தெரிவித்தார்.

(3-403-202)

# ஒட்டுசுட்டானில் மாவீரர் தின ஏற்பாடு

எதிர்வரும் மாவீரர் தினத்தை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் கடந்த 10 ஆம் திகதி கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் தனபால்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் செயற்பாட்டுக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. குழுவின் தலைவராக கோ.சிவஞானமும் செயலாளராக யோசெப் ஸ்ராலினும் பொருளாளராக விமலேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர் 10 பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சிறப்புரை நிகழ்த்தினர்.

(3-341-202)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவனும்
திரு.நவரத்தினம் புனிதம்
தம்பதியரின் செல்வப் புதல்வன்

## ந.தனுசிகன்

அவர்கள் 2005 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலய திருக்குறள் மனனப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமையையிட்டு அவரையும் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்
பெற்றோர் நவரத்தினம் புனிதம்
அப்பா (பிரான்ஸ்)
தகவல்: பெரியம்மா

அல்லாரை தெற்கு,
மீசாலை. (42701)(21.17.11)


## யாழ்.இந்து மாணவ முதல்வர்களின் சஞ்சிகை வெளியீடு

யாழ். இந்துக் கல்லூரி மாணவ முதல்வர்களின் ஏற்பாட்டில் முதன்முறையாக 'த லீடர்' என்னும் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வர் ச.சுஜென் தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கே. குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

விழாவில் வரவேற்புரையை த.செருஜனன் வழங்கினார். ஆய்வுரைகள் மற்றும் வாழ்த்துரைகள் என்பனவற்றைத் தொடர்ந்து இதழாசிரியரும் ஒழுங்கமைப்பாளருமான தி.சுகந்தன் சஞ்சிகையின் வடிவமைப்பு பற்றிய சிறப்புரை ஆற்றினார். பல முன்னணிப் பாடசாலைகளின் மாணவ முதல்வர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி இந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. (ஐ-17)


# யாழ்ப்பாணம் மாநகரசபை
# 2005 ஆம் ஆண்டுக்கான
# வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும்
# பதிவுசெய்தல்

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/உற்பத்தியாளர்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30-12-2005 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருள்கள்**

01) காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02) அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரிகள்)
03) மேல் நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
04) சித்த மருத்துவ மருந்துகள்
05) கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
06) பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருள்கள்
07) கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள் முதலியன)
08) தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09) கற்கள், மணல்கள்
10) நீர் வழங்கு பொருள்கள், பி.வி.சி.குழாய்கள் முதலியன
11) வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகள்
12) மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்
13) விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்
14) எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15) இரும்புப் பொருள்கள்
16) பனை மரங்கள், சலாகைகள்
17) நூலகங்களிற்குரிய நூல்கள்
18) வாகனங்களிற்கான பற்றறிகள், ரயர், ரியூப் முதலியன
19) தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்
20) தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21) சுத்திகரிப்புப் பிரிவிற்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22) கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரத்துக்கான (கனொன், சார்ப்) உதிரிப்பாகங்கள் வழங்கல்

**சேவைகள்**

01) அச்சிடுதல்
02) தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03) மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04) ரியூப் ஒட்டுதல் (வாகனங்கள்)
05) ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06) ஏற்றி இறக்கல் வேலைகளிற்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல் (சுத்திகரிப்பு, வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்)
07) கோலவுடை தைத்தல்
08) மின் மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தல்.
09) மின் கலங்களிற்கு மீள் மின் வலுவூட்டல்
10) இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
11) வாகனங்கள் சேர்வீஸ் செய்தல்
12) கணனி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் என்பன திருத்தம், சேர்விஸ் செய்தல்

கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல்கள், சேவைகள் 2006" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கவேண்டும்.

வழங்கல்களிற்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள், "**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்**" என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளிற்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ்.மாநகரசபை கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூ. 230/- (வற் வரி உற்பட) பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயரிற்குப் பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலை நாள்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவுசெய்யப்பட்டவரிடமிருந்து கோரப்படும்.

கோரப்படும் போது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள் அல்லது சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத/பொருள்கள்/சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

திரு.சி.வீ.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

09/11/2005 (சி/46169) (26-14-46)


## மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், நவ.15

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட மகளிர் தின விழா எதிர்வரும் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவினை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

தையல் பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். தொடர்ந்து இளைஞர் பிரிவினரின் இசை அமுதம், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும். (3-204)

## மானிப்பாயில் எச்.என்.பி.கிளை

யாழ்ப்பாணம், நவ.15

மானிப்பாய் நகரப் பகுதியில் ஹற்றன் நஷனல் வங்கிக்கிளை ஒன்று புதிதாகத் திறக்கப்படவுள்ளது.

மானிப்பாய்- யாழ். பிரதான வீதியில் மேற்படி புதிய கிளை அடுத்த மாதம் இரண்டாம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சேமிப்பு வங்கி ஆகிய அரச வங்கிகள் பிரதான வீதிகளில் இயங்கி வருகின்றன.

மானிப்பாய் நகரப் பகுதியில் முதன் முதலாக தனியார் வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி சேவையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-185)

## வீதியில் குப்பை கொட்டாதீர்

ஈச்சமோட்டை விநாயகர் வீதியில் குப்பை மற்றும் கழிவுப் பொருள்களை கொட்ட வேண்டாம் என்று ஈச்சமோட்டை கிராம சேவையாளர் ம.சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இந்த வீதியில் வைரவர் கோயிலுக்கு அருகில் குப்பைகளை கொட்டுவதால் ஆலய சுற்றாடல் பகுதி மாசடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மாரிகாலம் ஆகையால் குப்பைகளைக் கொட்டுவதால் இந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் நிலை உருவாகும் என்றும் அதற்கேற்ப நடந்து கொள்ளுமாறும் கிராம சேவையாளர் பொது மக்களை கேட்டுள்ளார்.

(ஐ-17)


ACTION FAIM

# ASSISTANT LOGISTICIANS (JAFFNA)

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka, since 1997. Current activities are based in Jaffna, Batticaloa and Trincomalee districts. **We require services of two Assistant Logisticians (One for store, One for purchase) for Jaffna.**

The Assistant Logisticians will work under the responsibilities of a Logistician.

**Purchaser :** He will have to manage the purchases in accordance with the ACF procedures. Quotations, Planning of payment,...

**Store Manager :** He will be incharge of the stores in accordance with the ACF procedures. Follow - up of the in and the out, reports, documents and planning concerning the different deliveries.

- Applicants must be fluent in English and Tamil.
- Computer literacy, especially MS Word and Excel is required.
- Driving motorcycle license and Good knowledge of Jaffna area require.
- Experience in marketing, purchasing, and negotiating or logistics storage and storekeeping.

**Category** : Senior position
**Duration** : 1 year with insurance coverage

**Apply with in 10 days or as soon as possible :**

**ACF Logistic Job Vacancy**
**No.40, Rakka lane, CHUNDIKULI,**
**JAFFNA.**
**Phone Number : 222 2465**

(C/46195)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி புனிதவதி நமசிவாயம்

தலைகாட்டி, வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 83/19, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி நமசிவாயம் 13.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் மருமகளும் உமை, கமலாதேவி (ஆசிரியை, யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மணிவண்ணன், கலா (ஆசிரியை, யா/யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் நாகேஸ்வரி சுப்பிரமணியம், புவனேஸ்வரி இலிங்கப்பிள்ளை, சரஸ்வதி நவரத்னலிங்கம் (கனடா), ஈஸ்வரியம்மா சிவானந்தன் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (லண்டன்), நீலாவதி நகுலேசபிள்ளை (கனடா), சியாமளா கருணைநாதன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, ஏரம்பு, இராசம்மா மற்றும் சந்திராம்பாள் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.11.2005 திங்கட்கிழமை கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

83/19, தஞ்சி ஒழுங்கை,
அரசடி வீதி, யாழ்ப்பாணம். (21.11.17)
தகவல்:
குடும்பத்தினர் (42717)



## செல்வி தேவராசா கிருஷிகா

(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - தரம் 1B மாணவி) உடுப்பிட்டி

உடுப்பிட்டி, சேர்ச் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேவராசா கிருஷிகா அவர்கள் 11.11.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தேவராசா- நிர்மலராணி தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நாகம்மா காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் ரத்தினபூபதி ஆகியோரின் பேர்த்தியும் நிர்மலானந்தன் கௌரி (லண்டன்) நிர்மலராஜன் (முகாமையாளர்- கோபிகிஷ்ணா ஸ்ரோர்ஸ், உடுப்பிட்டி ), வசந்தாதேவி இந்திரராசா (காணிப் பதிவகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகளும் நிர்மலரூபி, முருகதாஸ் (ஜேர்மனி), சிவராசா (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), மனோரஞ்சிதம், கெங்காவரதன் (பிரதேச செயலகம் - தெல்லிப்பழை), சகுந்தலாதேவி ஆகியோரின் பெறாமகளும் ஆவார். இன்று (15.11.2005) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

'லிங்கவாசா'
சேர்ச் லேன், உடுப்பிட்டி.
0776 - 724350 (42710)(11.1721)
தகவல்:
தேவராசா (தகப்பன்),
குடும்பத்தினர்.

# ஆரம்பக் கல்வியில் அக்கறை காட்டாமல் இடைநிலையில் உயர்ச்சியை எதிர்பார்க்க முடியாது

மாணவர்கள் கற்ற கல்வியின் தேர்ச்சி மட்டத்தை அளவிடுவதற் குப் பாடசாலை மட்டத்தில் கணிப் பீடு, தவணைப் பரீட்சைகள் என் பனவும் சில வகுப்புகளுக்கு மாகாண மட்டத்திலும் பரீட்சைகள் நடத்தப் படுகின்றன. இருப்பினும், தேசிய மட்டத்தில் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளே மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை அளவிடுவதற்குப் பொருத் தமான அளவுகோலாகக் கொள்ளப் படமுடியும். இந்தவகையில் ஆரம்ப வகுப்புகளில் கற்கும் மாணவர் களுக்கு அவர்கள் பெற்றுக் கொண்ட கல்வியின் தேர்ச்சி மட்டத்தை அள வீடு செய்வதற்கு 5ஆம் வகுப்பில் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையில் கிடைக்கும் பெறுபேறு களே மிகவும் உதவியாக உள்ளன.

கடந்த 5 வருடங்களில் யாழ்.

**5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை - யாழ்.மாவட்டப் பெறுபேறுகள்**

| விவரம் | தோற்றி யோர் | சித்தி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2001 | 6997 | 933 | 13.37 |
| 2002 | 7431 | 841 | 11.32 |
| 2003 | 8623 | 951 | 11.03 |
| 2004 | 8933 | 890 | 9.96 |
| 2005 | 9837 | 857 | 8.71 |

அட்டவணை - 1

மாவட்டப் பாடசாலைகளில் கிடைத்த பெறுபேறுகளை அட்டவணை 1 காட்டுகிறது. இவ்வட்டவணை வரு டந்தோறும் சித்திபெறும் மாணவர் களின் சதவீதம் யாழ்.மாவட்டத் தில் வீழ்ச்சியுற்றுச் செல்வதைக் காட்டுகிறது. 2001 இலிருந்து 2005 வரை 5ஆம் வகுப்பில் கற்ற மாண வர்கள் முறையே 10, 9, 8, 7, 6 ஆகிய வகுப்புகளில் அடுத்த வரு டம் இருப்பர். இவர்கள் 2007 தொடக்கம் சாதாரண தரப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாணவர்க ளாவர். அட்டவணை 1 இல் காட் டப்பட்ட வீழ்ச்சியானது 2007 தொடக்கம் நடைபெறவுள்ள சாதா ரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளி லும் பிரதிபலிக்கும் என்றே எதிர் பார்க்கலாம். எனவே, அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து பின் தங் கிய நிலையிலுள்ள இவ்வகுப்பு மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கும் விசேட கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டால் மட்டுமே ஏற்படப் போகும் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

அடுத்தபடியாக இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட் சையின் பெறுபேறுகளை வெட் டுப் புள்ளிகளின் அடிப்படையில் ஆராயாது குறைந்தளவான சித்திப் புள்ளி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே மாணவர் கள் பெற்ற தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிக்க உதவியாக அமையும். இவ்வகையில் இரண்டு பாடங்களுக்குமாக 80 புள்ளிகளுக்கு மேல் பெற் றவர்களைத் தேர்ச்சி பெற்ற வர்களாக ஒரு புறத்தி லும் ஏனையவர்களை மறுபுறத்தி லுமாக வைத்து மாணவர்கள் பெற்ற தேர்ச்சியை அட்டவணை 4 இன் மூலம் அளவிட முடியும். அட்ட வணை 2 வலய ரீதியான பெறு பேறுகளையும் மாவட்டப் பெறு பேறுகளையும் அட்டவணை 3 வலய ரீதியாகவும் மாவட்ட அடிப்படை யிலும் மாணவர்கள் பெற்ற புள்ளி களின் பரம்பல் களின் சதவீதத்தி னையும் காட்டுகி றது.

யாழ்.மாவட்டப் பாடசாலை கள் முழுவதையும் எடுத்துக் கொண்டால் 61.7 வீதமான மாண வர்கள் சராசரித் தேர்ச்சியை அடை யாதவர்களாகக் காணப்படுகின் றர். பரீட்சைக்குத் தோற்றிய 9387 மாணவர்களுடன் பரீட்சைக்கு விண் ணப்பித்தும் பரீட் சைக்குத் தோற்றாத மாணவர்களை யும் அதிக வயது காரண மாகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத மாணவர் களையும் சேர்த்துக் கொண்டால் இந்த வீதமானது 70 வரை அதிகரிக்க வாய்ப்புகளுண்டு. ஏனெனில், புள்ளி விவரங்களின்படி சென்ற வருடம் 4ஆம் வகுப்பில் இருந்த மாணவர்களின் தொகை யானது 12054 ஆகும்.

**யாழ்.மாவட்டப் பெறுபேறுகள் - 2005 (வலய ரீதியாக)**

| | புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் தொகை | சித்தி பெற்ற மாணவர் தொகை | சித்தி வீதம் |
|---|---|---|---|
| யாழ்.வலயம் | 3286 | 436 | 13.3 |
| வலிகாம வலயம் | 2931 | 205 | 6.99 |
| தீவக வலயம் | 694 | 23 | 3.31 |
| வடமராட்சி வலயம் | 1841 | 112 | 6.08 |
| தென்மராட்சி வலயம் | 1085 | 81 | 7.16 |
| யாழ்.மாவட்டம் | 9837 | 857 | 8.71 |

அட்டவணை - 2

ஆரம்பக் கல்வி ஆசிரியர் களுக்கான பற்றக்குறை ஆரம் பக் கல்வி அபிவிருத்தியில் காணப்படும் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாகும். ஆரம் பக் கல்வி ஆசிரியர் களாக நியமனம் பெறுவோர் வேறு பயிற்சி நெறிகளுக்குச் செல்வதாலும் சிலர்பட் டம் பெற்று இடைநிலைப் பாடசாலைகளுக்குச் செல்வதாலும் பெரும்பாலான பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கான வெற் றிடங்கள் நிறையவே காணப்படு கின்றன. ஆரம்பக் கல்வி ஆசிரியர் களுக்கான பற்றாக்குறை முடிவில் லாத ஒரு தொடர்கதையாக உள் ளது. இவ்வாறான குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுவது மிகவும் அவசியமானதாகும்.

**புள்ளிகளின் பரம்பல்களின் சத வீதத்தின் அடிப்படையிலான அட்டவணை**

| | 00-20 | 21-40 | 41-60 | 61-80 | 81-100 | 101-120 | 120-140 | 141-160 | 161-180 | 181-200 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்.வலயம் | 4.43 | 13.1 | 19.1 | 16.1 | 16 | 16.1 | 11.18 | 3.59 | 0.43 | 0 |
| வலிகாம வலயம் | 5.39 | 18 | 23.6 | 18.1 | 14.7 | 11.6 | 6.75 | 1.71 | 0.03 | 0 |
| தீவக வலயம் | 9.22 | 24.6 | 26.4 | 17.6 | 12.8 | 5.76 | 2.88 | 0.72 | 0 | 0 |
| வடமராட்சி வலயம் | 3.75 | 18.7 | 24.3 | 18.9 | 14 | 12.9 | 5.60 | 1.74 | 0.11 | 0 |
| தென்மராட்சி வலயம் | 3.7 | 15.6 | 23.6 | 19.6 | 14.7 | 13.8 | 6.74 | 2.09 | 0.28 | 0 |
| யாழ்.மாவட்டம் | 4.89 | 16.7 | 22.4 | 17.7 | 14.9 | 13.2 | 7.71 | 2.32 | 0.2 | 0 |

அட்டவணை - 3

**சாதாரண சித்தி மட்டத்திற்குக் குறைவான/ மேற்[illegible] மாணவர் (சதவீத அடிப்படையில்)**

| | 00-81 | 81-200 |
|---|---|---|
| யாழ்.வலயம் | 52.80 | 47.20 |
| வலிகாம வலயம் | 65.17 | 34.83 |
| தீவக வலயம் | 77.81 | 22.19 |
| வடமராட்சி வலயம் | 65.62 | 34.38 |
| தென்மராட்சி வலயம் | 62.39 | 37.61 |
| யாழ்.மாவட்டம் | 61.70 | 3[illegible] 30 |

அட்டவணை - 4

மாணவர்களின் ஆரம் பக் கல்வி அபிவிருத் தியில் அக்கறை காட்டாது இருந்து விட்டு இடைநிலைக் கல்வி யில் அபிவிருத்தியைக் காண் பது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். எனவே, ஆரம்பப் பாடசாலை களில் பாடசாலை ரீதியாக வுள்ள குறைபாடுகள் இனங் காணப்பட்டு அவை நிவர்த்தி செய் யப்பட்டால் மட்டுமே ஆரம்பக் கல்வியில் அபிவிருத்தியைக் காண முடியும்.

**விவரன்**

## கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் இடம்பெற்ற வகுப்பறை கவின் நிலைக் கண்காட்சியைத் திறந்துவைத்து கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் இ.சிவஞானசுந்தரம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் அ.அருந்தவநேசன், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கௌரி சுரேசன், முகிழ்நிலை ஆசிரியை டானியல் றோசறி ஆகியோர் காணப்படுகின்றனர். (202)



யாழ்.சோமசுந்தரம் பாலர் பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் சிறுவன் ஒருவர் கவிதை வாசிப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட செல்வி அ.யோகராஜா, திருமதி சா.ருபசிங்கம், திருமதி வொட்சன்-ரட்ணம் (அதிபர்), திருமதி [illegible] செல்வராஜா, செல்வி ச.பாலசுப்பிரமணியம், செல்வி சு.அமிர்தநாதன், ஆயுர்வேத வைத்தியர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் மேடையில் காணப்படுகின்றார்கள். (51)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் மாணவ தலைவர் களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவத் தலைவர் ஒருவருக்கு கல்லூரியின் அதிபர் வ.சிறிகாந்தன் சின்னஞ் சூட்டுவதைப் படத்தில் காணலாம். (13)



# கருணா குழு விடயத்துக்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லை என்கின்றார் ரணில்!

கொழும்பு, நவ.15

''கருணா விடயம், புலிகளின் விவகாரம். அதில் எனக்கு எந்தத் தொடர்புமில்லை. புலிகளைப் பல வீனப்படுத்தும் முயற்சிகள் எதி லும் நான் ஈடுபடவுமில்லை.

''கருணாவை நான் சந்தித்தது மில்லை. கண்டதுமில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் எதிர்க் கட்சித்தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரு மான ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுமுனதினம் மாலை 'சக்தி' தொலைக்காட்சியின்'மின்னல்' நிகழ்ச்சி யில், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் ஸ்ரீரங்கா எழுப்பிய கேள்வி ஒன்றுக் குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தரப்பில், அன்டன் பாலசிங்கத்தையே நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

விடுதலைப் புலிகள் அமைப் பில் கருணா விவகாரம் உருவானது துரதிஷ்டவசமானது. அது அவர் களின் உள்வீட்டு விடயம்.

எம்மைப் பொறுத்தவரை அமைதி நிலவவேண்டும். சமாதானம் நிலை பெறவேண்டும். புலிகளோ, கருணா குழுவினரோ, அரச படையினரோ யாரும் கொல்லப்படக்கூடாது. சட் டமும், ஒழுங்கும், நீதியும் எல்லோ ருக்கும் நியாயமானதாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும்.

எல்லோருக்கும் சமத்துவமான நிலைமை உறுதியளிக்கப்பட வேண் டும். அது குறித்து சகலருடனும் பேசி ஒரு தீர்வுக்கு வரவேண்டும் - என்றார் ரணில்.

இதேபோல் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட் டியில்,'சர்வதேச வலைப்பின்னல்' விடயம் குறித்து அவர் கூறியதா வது:-

கேள்வி: அமைதி முயற்சி நட வடிக்கைகளின்போது விடுதலைப் புலிகள் தவறாக நடந்துகொள்ளா மல் இருப்பதை உறுதிப்படுத்துவ தற்காகவா சர்வதேச வலைப் பின்னலை நீங்கள் அறிமுகப்படுத்தி னீர்கள்?

ரணில்: நீங்கள் 'சர்வதேச வலைப்பின்னல்' என்ற பதத்தை வித்தியாசமான வியாக்கியானத் தோடு பயன்படுத்துகிறீர்கள். அது புலிகளுக்கு எதிரான கூட்டமைப் பல்ல. நான் செய்ததெல்லாம் அமை திக்கும், புனரமைப்புக்கும் சர்வ தேச சமூகத்தின் ஆதரவை பெற்றது மட்டுமே.

ஆகையினால் அதனை நான் 'சர்வதேச சமூகமும் அமைதி முயற்சி களும்' என்றே அழைப்பேன். இலங்கை அமைதி முயற்சிகளில் சர்வதேச சமூ கம் இணைந்துகொண்டது 2002 நவம்பரில் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டின்போதாகும். அதில் இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகிய இருதரப் புமே கலந்துகொண்டன.

சமாதான முயற்சிகளுக்கு ஆத ரவு தருவதும் உடனடித் தேவை களுக்கான நிதிஉதவிகளை வழங்கு வதும் அந்த மாநாட்டின் நோக்க மாகும்.


இந்த மாநாட்டின்போது டோக் கியோ உதவி வழங்கும் மாநாட்டை 2003 ஜூனில் நடத்துவது எனத் தீர்மானித்தோம். ஆனால், டோக் கியோ மாநாட்டில் கலந்துகொள்ள புலிகள் மறுத்துவிட்டனர்.

சமாதான முயற்களில் மேலும் முன்னேற்றத்தைக் காணும் விதத் தில் சர்வதேசத்தின் ஆதரவையும், ஊக்கத்தையும் தரப்புகளுக்குப் பெற்றுக்கொடுப்பதே டோக்கியோ மாநாட்டின் நோக்கமாகும். உதவும் அமைப்புகளின் இணைத்தலை மைக்கு 4 உறுப்பினர்கள் இணைக் கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் பேச்சுகளில் பங்குபற்றுவதை இடைநிறுத்திய போதும் தொடர்பாடல்கள் தொடர் வதை சர்வதேச சமூகம் உறுதிப் படுத்தியது. அதன் பெறுபேறாக 2003 ஒக்டோபரில் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க நான் முடிவுசெய்தேன். அது நவம்பர் 2003 இல் அரசின் அறிக்கையில் பிரதிபலிக்கப்படு கிறது.

துரதிஷ்டவசமாக பேச்சுக்கள் மீளத் தொடங்கும் முன்னர் 3 முக் கிய அமைச்சுகள் அரசிடமிருந்து பறிக்கப்பட்டன. 2002 பெப்ரவரி முதல் 2003 நவம்பர் வரையான காலத்தில் எட்டப்பட்ட உடன்பாடு களும், புரிந்துணர்வும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு வலிமையான அத் திபாரங்கள் ஆகும். நாங்கள் இந்த இடத்தில் இருந்துதான் இனித் தொடரவேண்டும். - என்றார். (ஐ-க)

# முதலாம் ஆண்டு நினைவுஅஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பிரம்மனின் சாதனை

25 ✻ 06 ✻ 1946

குடும்பத்தின் வேதனை

27 ✻ 10 ✻ 2004

அமரர்

## சுப்பிரமணியம் செல்வராசா

(வாணி ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி)

திதி:பூரணை 15-11-2005

ஓராண்டு சென்ற வேகத்தைப் போல்
காலன் உங்களைக் கவர்ந்தானோ? - அப்பா
நெஞ்சினிலே வேதனைச் சுவடுகள்
பற்றி எரிந்தவண்ணம் நீங்காத துயரங்களுடன்
நீந்திக்கடக்க முயற்சித்து பரிதவித்து நிற்கின்றோம்
ஆனாலும்..............................எம்
எதிர்காலமே சூனியமாய் மாறியபோதும்
உங்கள் இனிமையான நினைவுகள் மட்டும்
திருக்குறள் வரி போல திகட்டாமல் இனிக்கிறது
எமக்கு மறுஜென்மம் உண்டேல் - மீண்டும்
பிறக்கவேண்டும் இவ்வையகத்தில்
உங்கள் மனைவி, மக்களாய்....

இன்று (15-11-2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கென்ஸ்மன் லேன்,
டச்சுறோட், சாவகச்சேரி.

-குடும்பத்தினர்.

# தேர்தலைப் புறக்கணிப்பது மக்களின் அடிப்படை உரிமை; அவர்களை மிரட்டுவது ஒரு தேர்தல் மோசடியே ஆகும்!

## பாதுகாப்பு வலயத்தை அகற்ற முடியாதவர்கள் எப்படி தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்கமுடியும்?

(நேற்றைய தொடர்ச்சி)

ஆக்கிரமிப்புத் தேசமான ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் தமிழ் மக்களுடைய சுதந்திரத்தையும் சுயநிர்ணயத்தையும் ஏற்றுக்கொள்ளாத ஒரு நிலையில் தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பு இராணுவம் அட்டகாசம் புரிந்து பாரிய அழுத்தத்தை தமிழ்மக்களுக்கு கொடுத்திருக்கும் இந்நிலையில் அடிமைகளுக்கு தேர்தல் தேவையென்று, அதுவும் 'எஜமானாகிய என்னை நீயும் சேர்ந்து தெரிந்துகொள்' என்ற நிலையில், தேர்தல் ஒரு தேவைதானா?

தமிழ் மக்களை அடிமைகளாக்கி, உயிரையும் இரத்தத்தையும் குடித்து, அகதியாக்கி, அநாதையாக்கி, சொத்தை அழித்து, அபகரித்து, தமிழர்களை நாயினும் கீழாச் சாதியாக்கி, இன்னும் எங்கள் புனிதமான தாயக மண்ணை நசித்து, எங்கள் தாய்க்குலத்தை மானபங்கம் செய்து, குண்டு வீசி, செல் அடித்து, அழித்து, வஞ்சம் தீர்த்து, இன்னும் எம்மைக் குட்டிச் சுவராக்கும் கைங்கரியங்களைச் செய்யும் ஸ்ரீலங்காவின் முப்படைகளின் தளபதியாகிய ஜனாதிபதியை தமிழ்மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுப்பதுதான் ஜனநாயகம் என்றால் அது எமக்கு வேண்டாம்.

ஜே.ஆர் தொடங்கி சந்திரிகா வரை, திம்பு தொடக்கம் ஜப்பான் வரை பேசியாச்சு. ஏன் பேச்சுகள் சரிவரவில்லை. தமிழருக்கு எதையும் கொடுக்க விருப்பமில்லை. அதுதான் உண்மை. மேடையிலே தமிழர்கள் கேட்கிறார்கள் ''சிங்களவர்களே எமது உரிமையைத் தாருங்கள்; நீதியைத் தாருங்கள்'' என்று. சற்றுச் சிந்தியுங்கள்! சிங்களவர்கள் தமிழர் தரப்பிடம் என்ன கேட்கிறார்கள் ''நாங்கள் தமிழர்களிடம் பிச்சை கேட்பதற்கு எதுவுமில்லை.''அப்படியென்றால் பேச என்ன இருக்கிறது? சிங்களவர்கள் சொல்கிறார்கள் நாங்கள் சொல்கிறதை நீங்கள் கேட்கவேணும். எங்களிடம் நீங்கள் பறித்த ஆயுதங்களைத் திருப்பித்தாருங்கள். பிறகு நாங்கள் செய்கிறதை "நீங்கள் கண்டுகொள்ளுங்கோ. தீர்மானிக்கிறது நாங்கள் அவ்வளவுதான்'' இதற்கு ஒரு திறமான ஜனாதிபதி எங்களுக்கு வேணும். நீங்களும் அதற்கு ஓம் எண்டு சொல்லுங்கோ. இது தமிழர் தரப்பிற்கு உதவுமா? தேர்தல் தேவையா?

**தமிழர் சிந்தனையும் நிலைப்பாடும்**

தமிழர் நாம் தாயகத்தை மீட்பது என்று எப்பவோ தீர்மானித்து விட்டோம். இதற்காக காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்திலிருந்து திலீபன் உண்ணாவிரதம் வரை முயற்சி எடுத்தோம். கெஞ்சிக் கேட்டோம், கும்பிட்டுக் கேட்டோம், நக்கிக்கேட்டோம், நயந்தும் கேட்டோம், எதுவும் கிடைக்கவில்லை. நிமிர்ந்து நின்றோம். தேசியத் தலைவர் வழி நடத்தி நெஞ்சு நிமிர்த்தித் துணிந்து கேட்டோம், உறுக்கிக்கேட்டோம், உரத்துக் கேட்டோம். போர்த்துக்கேயரிடம் இழந்த இறைமையைத் திரும்பவும் பெற்றுக்கொண்டோம். 18 ஆயிரம் எம் இளம் குஞ்சுகளை மாவீரராக்கிவிட்டோம். ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட எங்கள் உறவுகளை அர்ச்சனையாக்கி விட்டோம்.

எங்கள் இறைமையை அங்கீகரிக்கும்படி ஸ்ரீலங்காவைக் கேட்கின்றோம். இதுவே சமாதானத்திற்கான ஒரேயொரு ஜனநாயக வழி; சிறந்த வழி. இதற்கான ஒரு ஸ்ரீலங்கா தலைவரை ஸ்ரீலங்கா மக்களே தீர்மானிக்கட்டும். எங்களுக்கான சமாதான வழிகளைச் சரியான வழியில் காட்டும் ஒரு தேசியத் தலைவர் தமிழ் மக்களாகிய எங்களுக்கு உண்டு. பரிதாபம்! ஸ்ரீலங்கா மக்களுக்கு இப்படியொரு தலைவர் இன்று இல்லை. இது அவர்களுக்கு தலையிடி. இதற்கான சித்தாலெப்பை தொழிலதிபரை அவர்கள் தெரிவுசெய்தால் அரசியல் தலையிடிகளுக்கு தீர்வுகிடைக்காவிட்டாலும் தலையிடி நிவாரணமாக ஆளுக்கொரு சித்தாலெப்பைச் சிமிழாவது கிடைக்குமல்லவா?

**முடிவுதான் என்ன?**

தமிழ் மக்களாகிய எங்கள் பிரச்சினைகளுக்கும் அரசியல் பொருளாதார விடுதலைக்கும் சிங்களத் தலைமை தீர்வு தரப்போவதில்லை. எங்கள் பிரச்சினைகளுக்கும் அரசியல் பொருளாதார விடுதலைக்கும் வழி எங்களிடம் உண்டு. எங்களுக்கு நல்ல தலைமைத்துவம், கட்டமைப்பு உண்டு. ஆகவே, தமிழ்மக்களாகிய நாம் ஒரு எதிரிப்படைக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து, அவரிடம் ''நீர் போய் தமிழர் தலைவரிடம் பேச்சு நடத்தும் என்று கோரிக்கை விட வேண்டிய தேவை இல்லை'' எதிரியின் முப்படைத் தலைவர் எங்கள் அபிலாஷைகளையோ உரிமைகளையோ குறைந்த பட்சக் கோரிக்கையாக பேச்சு மேசைக்கு கொண்டு வருவார் என்று நாம் கனவும் காணத்தேவையில்லை

ஆக மொத்தத்தில், எல்லாப் பேய்களுக்குள்ளும் சிறிய பேயைத்தேர்ந்தெடு என்று புத்திமதி கூறுபவர்களுக்கு '' தயவு செய்து உங்கள் பாட்சா தமிழ் மக்களிடம் பலிக்காது என்பதை நன்றாய்த் தெரிந்து கொள்ளுங்கள்'' அடுத்ததாக 1958 இனக்கலவரத்தில் மொட்டையடித்து, தார் ஊத்தி, கொலை செய்து, கற்பழித்து தெற்கிலிருந்து வடக்கிற்கு என்று தமிழ் மக்களைக் கப்பலில் ஏற்றி அனுப்பிவைத்தீர்களே! அன்றைக்கே தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தை இனங்கண்டு விட்டார்கள்; தங்கள் இறைமையைப் பெற்றுவிட்டார்கள். எனவே, இன்னொரு நாட்டு மக்களைத் தேர்தலில் வாக்களிக்கக் கோருவது உங்களுக்கே நியாயமாகப்படுகின்றதா?

ஆழிப்பேரலைக் கட்டமைப்பிற்கு கையெழுத்து புலிகள் வைத்ததால் தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் இறைமையை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று கொக்கரிப்பவர்களுக்குத் தெரியும் தமிழ்மக்கள் இதுவரையும் ஸ்ரீலங்காவின் இறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று. அப்படியாயின் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது ஸ்ரீலங்காவின் இறைமையை ஏற்பதற்கு சமம் என்பதைத் தமிழ் மக்கள் புரியாமலா இருக்கிறார்கள். தனது ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்ற தமிழர் தாயகத்தில் தேர்தலை வைப்பது இல்லை என்று ஸ்ரீலங்காவே தீர்மானித்திருக்கும் போது தமிழீழ மக்களை வாக்களியுங்கள். அதாவது, இன்னொரு தேசத்தின் தேர்தலில் வாக்களியுங்கள் என்று கோரும் தமிழர்களை என்னவென்பது. தன் சொந்தத் தாயகத்திலே வாழ வழியில்லை.

10 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர் தாயகம் திரும்பவழியில்லை. சொந்தக் காணிக்குள்ளே குடிசைகட்டி வாழ வழியில்லை, மனைவியோடு இரவிலே உறங்க வழியில்லை, சுற்றிவரத் துப்பாக்கி, இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள், கடற்கரை கம்பிவேலி அகற்ற வக்கில்லை, இந்து, கிறிஸ்தவ தேவாலயங்கள் பாடசாலைகள் எல்லாமே இராணுவ முகாமாகிவிட்ட நிலையில் தாயகம் முழுவதும் ஆக்கிரமிப்பு இராணுவம் போருக்குத் தயாராகி நிற்கும் நிலையில் தமிழீழ மக்கள் தங்களுக்குப் பிச்சையாகக் கிடைத்திருக்கின்ற ஜனநாயக உரிமையாம் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து உலகிலேயே மனித உரிமை மீறலுக்குப் பேர் போன ஸ்ரீலங்கா முப்படைகளின் தளபதிக்கு வாக்களித்து தெரிவு செய்யுமாறு கோரிக்கையும் விடுகிறார்கள். நாடு கெட்ட கேட்டிற்கு இதுவும் ஒரு கேடு.

தமிழீழ மக்கள் தேர்தலை முற்றிலுமாகப் புறக்கணிப்பது, பகிஷ்கரிப்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமை. அவர்களை வாக்களிக்குமாறு மிரட்டுவது போலிக் கோஷங்களை முன்வைத்து ஏமாற்றுவது ஒரு தேர்தல் மோசடி மட்டுமல்ல, தமிழ் மக்களின் மீது திணிக்கப்படும் ஒரு பாரிய அழுத்தமாகும், எனவே, ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி தேர் தலில் வாக்களியாது எமது இறைமையைப் பாதுகாப்போம். தமிழ்மக்கள் நாங்கள் எங்கள் தலைவரை எப்பொழுதோ தேர்ந்தெடுத்து விட்டோம். எனவே, எமது தலைவரோடு பேச வேறொரு நாடான ஸ்ரீலங்காவின் உயிர் கொல்லும் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை.

**இமையவன்**

எனவே, ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் வாக்களியாது தேர்தலை புறக்கணிப்போம். (முற்றும்)

---

# தேர்தலின் பின் யாரையும் இம்சைப்படுத்தாதீர்கள்!

## ரணில் தமது கட்சியினருக்கு உத்தரவு

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருக்கு இடையூறு, தீங்கு விளைவிக்கக்கூடாதென்றும், கட்சி உறுப்பினர்கள் சட்டம், ஒழுங்கைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கோரியிருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்தபின்னர் இதனை மீறும் கட்சி உறுப்பினர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, செயலாளர் எம்.வி.கே.கே.வேரகொட; சட்டத்தரணி தயா பெல்பொல ஆகியோரடங்கிய குழுவொன்றையும் ஐ.தே.க. தலைவர் நியமித்திருக்கிறார்.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைப்பாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மாகாண ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட முகாமையாளர்கள் மற்றும் தேர்தல் தொகுதி முகாமையாளர்களுக்கு கடிதமொன்றை ஐ.தே.க. தலைவர் அனுப்பியிருக்கிறார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் 18ஆம் திகதி நண்பகல் அளவில் எமது வெற்றி உறுதிசெய்யப்பட்டுவிடும். அதன்போது வேறு கட்சிகளைச் சார்ந்தோருக்கு இம்சைகள் விளைவிக்காமல், நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டியது உங்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாதிருக்க எமது கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கப்படவேண்டும்.

-இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# 'பேர்க்' நிறுவனத் தலைவர் அமரசேகர இராஜினாமா

கொழும்பு, நவ.14

பொது நிறுவனங்களை மறுசீரமைக்கும் ஆணைக்குழுவின் (பேர்க்) தலைவர் நிஹால் ஸ்ரீ அமரசேகர தமது பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டயக் கணக்காளரான நிஹால் ஸ்ரீ அமரசேகர வரையறுக்கப்பட்ட ஹோட்டல் அபிவிருத்தி நிறுவனத் தலைமைப் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்திருக்கிறார்.

உடனடியாக இந்த இராஜினாமா ஏன் இடம்பெற்றது என்பது பற்றித் தெரியவரவில்லை. ஆனாலும், ஜனாதிபதி சந்திரிகா பதவியிலிருந்து ஓய்வுபெறும் தறுவாயில் அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் பதவிகளை இராஜினமாச் செய்துவரும் வரிசையில் இதுவும் ஒன்றெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# சார்க் உச்சி மாநாட்டில் சந்திரிகாவுக்குப் புகழாரம்

தனது பதவிக்காலத்தின் முடிவில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற 13ஆவது 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு, தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் பாராட்டிப் புகழாரம் சூட்டினர்.

தெற்காசியாவின் மூத்த தலைவர்களில் ஒருவரான மாலைதீவு ஜனாதிபதி மஹ்மூன் அப்துல் கையூம் தமது உரையின்போது ஜனாதிபதி சந்திரிகா 11வருடகாலம் ஆற்றிய சேவைகளைப் பாராட்டியதுடன் ஜனாதிபதியின் எதிர்காலம் சிறப்புறுவதற்குத் தமது நாட்டின் சார்பிலான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

பாகிஸ்தான் பிரதமர் சௌகட் அஸீஸ் தமது உரையின்போது, 'சார்க்' அமைப்பிற்காக ஜனாதிபதி அரும்பெரும் சேவையாற்றியுள்ளார் எனக் குறிப்பிட்டதுடன் சிறந்த - உன்னதமான - அவரின் தலைமைத்துவத்தை இழப்பது என்பது கவலைக்குரியதென்றும் கூறினார்.

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா தனது உரையின்போது சற்று உணர்ச்சிவசப்பட்டே காணப்பட்டார். ''ஜனாதிபதி சந்திரிகா மீது பங்களாதேஷ் மக்களுக்கு விசேட ஈர்ப்பு இருக்கின்றது. அவரின் ஆக்கபூர்வமான தலைமைத்துவத்தை ஒட்டுமொத்தத் தெற்காசியாவே இழக்க வேண்டியேற்பட்டுள்ளது.'' - என்றார் பேகம் காலிதாஸியா.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தனது உரையின்போது ஜனாதிபதி சந்திரிகாவின் சேவையைப் பாராட்டியதுடன், நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்துவதற்காக அவர் ஆற்றிய சேவைகள் என்றும் நினைவு கூரப்படுமென்றும் தெரிவித்தார்.

தெற்காசியத் தலைவர்களின் புகழாரங்களை ஆசனத்தில் அமர்ந்தபடி தனக்கேயுரிய பாணியில் புன்முறுவலுடன் ஜனாதிபதி சந்திரிகா செவிமடுத்துக் கொண்டிருந்தார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இறுதியாக ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றும்போது, ஜனாதிபதி பதவியிலிருந்து தாம் சில தினங்களில் ஓய்வெடுக்கவுள்ளாரெனவும், 'சார்க்' அமைப்பின் ஆற்றல் மீது தனக்கு எப்போதும் நம்பிக்கையிருப்பதாகவும் கூறினார். (க)

# மஹிந்த ஜனாதிபதியாகும் பட்சத்தில் ஜே.வி.பியினர் ஐந்து பேர் அமைச்சராவர்

கொழும்பு,நவ.15

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றால், மீண்டுமொரு பொதுத்தேர்தல் இடம்பெறும்வரைஅமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் 5 அமைச்சர் பதவிகளை ஜே.வி.பிக்கு வழங்க உத்தேசித்துள்ளதாக அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அமைச்சர் பதவிகளை விட மேலதிகமாக போக்குவரத்து அமைச்சர் பதவியொன்று ஜே.வி.பிக்குக் கிடைக்கவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மேலும், மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவை 30-35 அமைச்சர்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது எனவும் தெரியவந்துள்ளது. (3-206)

DEZA
DDC
DSC
SDC
COSUDE

## TENDER NOTICE

SDC Jaffna invites tender for the construction of Chavakachcheri Hindu primary school complex. That consists of 2 Sets OF 140'x25' two storied buildings, 1 Set of toilet block cum path way 20'x50' together with water tank and landscaping.

Interested Bidders having ICTAD grade M5 and M6 shall collect their bids.

Bid document shall be collected at **SDC field office Jaffna 521/11, Point Pedro Road, Jaffna. Tel:021 - 2223928 up-to 12.00 A.M on 18th of November 2005.** For further details feel free to contact the Project managers.

(92620)

## மானிப்பாய் இந்து முதலிடம்

வலி.தெற்கு,நவ.15

'பவ்ரல்' அமைப்பினரால் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட வினாடி - வினாப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இந்த அணியினர் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களான அ.ஜனாத், அ.கோகுலரமணன், ஜெ.றஜீவன், சு.சுஜீவன் ஆகியோர் வினாடி - வினாப் போட்டியில் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமைதேடித் தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-152)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 - 06 - 1927

மறைவு 06 - 11 - 2003

**அமரர் சின்னத்தம்பி கந்தையா**

(முன்னாள் மாத்தறை வர்த்தகர்)

அன்புள்ள அப்பாவே!
பண்புள்ள அப்பாவே!
பாரினைவிட்டு எங்குதான் சென்றீரோ!
பரமன் பாதம் உங்கள் ஆத்மாசாந்தியடைய
வேண்டுகின்றோம்.

K.T.M. ஒயில் மில்,
கல்வியங்காடு. (42705) (24-34-19)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகளில் ஓராம் ஆண்டு



மலர்வு 11.04.1951

உதிர்வு 27.10.2004

திதி : ஐப்பசி பூரணை
15.11.2005

ஆண்டொன்று போனதய்யா - நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து
ஆறவில்லை எமது துயரம்
என்றும் உங்கள் நினைவோடு....

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்
அமரர் **பொன்னுத்துரை வேணுகோபால வாணிதாசன்**

மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

மனைவி,
பிள்ளைகள்,
சகோதரிகள்.

(42560)(11-46)

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி பராசக்தி இராசையா**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, நல்லூர் ஸ்தான சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலை)

எமது நண்பன் **கஜந்தனின்** அன்புத் தாயார் **திருமதி பராசக்தி இராசையா** அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நண்பர்கள்,**
யாழ். மத்திய கல்லூரி,
(42848) (24-34-49) **A/L 97, வர்த்தகப் பிரிவு மாணவர்கள்.**

உ
சாமியே சரணம் ஐயப்பா



**அகில இலங்கை யாழ். கோண்டாவில் கிழக்கு**

## அருள்மிகு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்-2005
## வருடாந்த மகரஜோதி மண்டலப் பூஜைப் பெருவிழா

**ஐயப்பன் அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் கார்த்திகை மாதம் முதலாம் நாள் (16.11.2005) புதன்கிழமை காலை ஐயப்பன் பத்தர்கள் புனித யாத்திரை விரத மாலை அணியும் நற்திருநாள். அன்று 7 மணிக்கு அதற்கான கிரியைகள் ஆரம்பம். விரதகாலத்தின் போது பத்துத் தினங்கள் கொடியேற்றத் திருவிழா நடைபெறும். அடியார்கள், சாமிமார்கள், குருமார்கள் அனைவரும் கலந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**விழாக்கால விவரம்**

தினமும் காலை 7 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து பூஜை 8 மணிக்கு நிறைவுபெறும். மதியம் 12 மணிக்கு பூஜை மட்டும் நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகம், 5.30 மணிக்கு பூஜை, 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, அர்ச்சனை, 7 மணிக்கு பஜனை ஆரம்பம், 8 மணிக்கு படிப்பூஜை, 8.30 மணிக்கு ஹரிவராசனம் நடைசாத்தி தினமும் அடியார்களுக்கு சக்திபூஜை, அன்னதானம் நடைபெறும். 9 மணிக்கு விழா நிறைவுபெறும்.

புதன்கிழமை, சனிக்கிழமைகளில் விஷேட உற்சவம் நடைபெறும். விசேட காலத்திற்கேற்ப நேரம் மாற்றம் செய்யப்படும். விரத ஆரம்பம் 16.11.2005 புதன்கிழமை காலை 7 மணிக்கு பூஜை அபிஷேகம், மாலை 4 மணிக்கு பூஜை

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் திருவிழா | 26.11.2005 | சனிக்கிழமை | (பகல் 11 மணிக்கு ) கொடியேற்றம் |
| 2ஆம் திருவிழா | 27.11.2005 | ஞாயிற்றுக்கிழமை | யானை வாகனம் |
| 3ஆம் திருவிழா | 28.11.2005 | திங்கட்கிழமை | மாலை வேதபாராயணத் திருவிழா |
| 4ஆம் திருவிழா | 29.11.2005 | செவ்வாய்க்கிழமை | நிர்த்தோற்சவம் |
| 5ஆம் திருவிழா | 30.11.2005 | புதன்கிழமை | பால்குடபவனி |
| 6ஆம் திருவிழா | 01.12.2005 | வியாழக்கிழமை | சந்தன அலங்காரம் |
| 7ஆம் திருவிழா | 02.12.2005 | வெள்ளிக்கிழமை | வேட்டைத்திருவிழா |
| 8ஆம் திருவிழா | 03.12.2005 | சனிக்கிழமை | புஸ்பா (பூ) அபிஷேகம் |
| 9ஆம் திருவிழா | 04.12.2005 | ஞாயிற்றுக்கிழமை | (பகல் 10 மணிக்கு) தேர்த்திருவிழா |
| 10ஆம்திருவிழா | 05.12.2005 | திங்கட்கிழமை | (பகல் 10 மணிக்கு) தீர்த்தம் ஆடுதல், கற்பூரச்சட்டி எடுத்தல். |
| 11ம்திருவிழா | 06.12.2005 | செவ்வாய்கிழமை | பூங்காவனம் திருவூஞ்சல் |

25.12.2005 ஞாயிற்றுக்கிழமை நெய்த்தேங்காய் நெய்நிரப்புதல்.

26.12.2005 திங்கட்கிழமை இருமுடிகட்டுதல், படியேறுதல், நெய்அபிஷேகம், விசே. படிப்பூஜை, மண்டலபூர்த்தி

கிரியாகாலக் குருமணி பிரம்மஸ்ரீ.க.மு.சோமசுந்தரக் குருக்கள் (உரும்பிராய்)
விசேட மங்கள வாத்தியம் தேவஸ்தான வித்துவான் க. உதயநாதன் குழுவினர், இணுவில்.
ஒளி, ஒலி அமைப்பு யமுனா சவுண்ட்ஸ், மல்லாகம்.
பூமாலை அலங்காரம் S. கதிரமலைநாதன், கோண்டாவில்.

சாமிமார்கள், அடியார்கள் உரிய நேரத்தில் வந்து ஐயனை தரிசித்து ஐயன் அருளைப் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், நெய், தேன், பழவகை, பூ, பூமாலை, துளசி, போன்ற அபிஷேகப் பொருள்களையும் தந்துதவி மற்றும் அன்னதானம், சக்திபூஜைக்குப் பொருள் உதவி, பண உதவி தந்து உதவுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். மாலை அணிந்து விரதம் இருக்கும் சாமிமார்கள் சகல பூஜைப் பொருள்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் முன்கூட்டியே பதிவுசெய்யவும்.
(பஜனைப் பாடல் புத்தகங்களையும் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

தொடர்புகளுக்கு:
021-222 7688,
0777110629

அனைவரும் வருக!
அவன் அருள் பெறுக!

ஆதீனகர்த்தா,
பிரம்மஸ்ரீ. க. ஹரிகரசுத சர்மா
ஆலயப் பிரதமகுருவும், குருசாமியும்.

பிரசுர அன்பளிப்பு: திரு. லயன் கனகசபை சுந்தரலிங்கம்
சமாதான நீதவான் (காரை. மணிகண்டன்)

(42846) (54-34-19-24)

(சுபம்)

## ஈராண்டு நினைவலைகள்



**அமரர் வெலிச்சோரர் மைக்கல்**

[முன்னாள் மைக்கல் றேடியோ சேவிஸ் உரிமையாளர்]

மண்ணில் **23-02-1935**

விண்ணில் **15-11-2003**

ஐயா! நீர் என்னைவிட்டுப் பிரிந்து ஈராண்டுகள் மறைந்துவிட்டனவே, நம்பமுடியவில்லையே! இதுவரையும் கண்ணீருடனும் கவலையுடனும் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்துவிட்டேன். எத்தனையோ உறவினர்கள் எனக்கு ஆறுதலாக இருந்தும் உமது நிழலில் இருப்பது போன்ற ஆறுதலில்லை ஐயா! நீர் இல்லாத உலகம் எனக்கு இருண்ட பாலைவனந்தானையா! நீர் சென்ற பாதையில் என்னையும் வெகுவிரைவில் அழைத்துச் செல்லுமையா! அங்குதான் எனக்கு நிம்மதி கிடைக்கும்.

யாழ்ப்பாணம். (42702) (32-34-19-24) **மனைவி.**

# ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை நோக்கத்திருந்து திசைமாறிவிட்டது



## யாழ். மாவட்ட நீதிபதி கவலை

நல்லூர்,நவ.15

ஐந்தாம் தர புலமைப் பரீட்சை அது ஆரம்பித்த நோக்கத்துக்கு மாறாக இன்று வெறும் முழு நேரப் புத்தகக் கல்வியாகிவிட்டது.

வடக்கு சிறுவர் சமூகம் உருவாக்கத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா இவ்வாறு கூறினார்.

யாழ். பொதுநூலகக் கேட்போர்கூடத்தில் வடமாகாணம் சிறுவர் உரிமைகள் நிகழ்வுத் திட்டப் பிராந்திய அலுவலர் ரி.ரி.மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி விக்னராஜா மேலும் பேசும்போது கூறியதாவது:-

ஐந்தாம்தர புலமைப்பரீட்சை இன்று அது ஆரம்பித்த நோக்கத்திற்கு மாறாக மாணவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, முழு நேரப் புத்தகக் கல்வியாகிவிட்டது. இதனால், உள வளர்ச்சி, நடையுடை பாவனைகள் பாதிப்படைய ஏதுவாகிறது. இதுபற்றிப் பெற்றோர்களும் கல்விச் சமூகமும் சிந்திக்கவேண்டும்.

ஐ.நா. செயலாளர் நாயகம், சிறுவர்களின் உரிமைகளை அனைவரும் அங்கீகரித்துச் செயற்படும் போதுதான் நாடுகளில் பொருளாதார சுபீட்சமும் சமாதானமும் வரும் எனக் கூறியதை ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சட்டங்களை சமுதாயத்தில் உள்ளவர்கள் விளங்கிக் கொள்ளாவிட்டால் பயனில்லை. சிறுவர்களது உரிமை விழுமியங்களை அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

தற்போதைய கல்விமுறை காரணமாக மாணவர்கள் நண்பர்களுடன் அளவளாவ, விளையாட்டில் பங்குபற்ற நேரம் இல்லை. இது சீர் செய்யப்படுவேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் கருத்துகளையும் அனுபவங்களையும் தமது கருத்து அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டால் பிள்ளைகளின் உளவிருத்தி, நம்பிக்கை என்பன ஸ்திரமடையும். இன்று வீதிகளில் நடைபெறும் சில சம்பவங்களை மட்டுப் படுத்தக்கூடியதாக இருக்கும்.

சிந்தனைகளை, எண்ணங்களை உரிய முறையில் வழி நடத்தாமையே சிறு வர்கள் உள்ளத்தில் இருக்கும் ஆத்மீகச் சிந்தனைகள் வெளிப்படாமல் இருக்கக் காரணம். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவுகள் குறித்த செய்திகள் வருகின்றது. இவற்றுக்கு எதிராக சட்டங்களைக் கடுமையாக்கியும் புதிய சட்டங்களை உருவாக்கியும் உள்ளபோதும் சட்டத்தின் தன்மை மக்களுக்கு வெளிப்படாமை துரதிர்ஷ்டமானதே.

தேசிய பாதுகாப்புச்சபை அதன் அங்கமான சிறுவர் பாதுகாப்புக்குழு அர்ப்பணிப்புள்ள புத்திஜீவிகளை உறுப்பினர்களாக் கொண்டு செயற்படுகிறது. அவர்கள் தமது நோக்கில் பலமைல்கள் முன்னேறியுள்ளனர். அவர்கள் இப்போது பரவலாகப் பிரதேச ரீதியாகச் செயற்படுகிறார்கள். அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

சிறுவர்களால்தான் அவர்களது பிரச்சினைகளை உணர்வு ரீதியாகப் புரிந்துகொள்ளமுடியும். சிறுவர்களால் சிறுவர்களுக்கு உதவ முடிந்ததை இன்றைய நிகழ்ச்சிகளில் எழுதிக் காட்டப்பட்டது. நிறுவன மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களால் சிறுவர்களைப் பாதுகாக்கும் அமைப்பு இன்று உதயமானது. வடக்குச் சிறுவர் சமூகத்தின் பிரசவம் எதிர்காலத்தில் நல்லதாக அமையவேண்டும் என்று நாம் சிந்திக்கிறோம் - என்றார்.

ஐ.நா. சிறுவர் நிதியத்தின் பிரதிநிதி செல்வி சர்மினி, திருமதி கொனிங்ரன்ரைன், எஸ்.தவரூபன், யூ.என்.டி.பி. பிரதிநிதி எஸ்.முருகதாஸ் உட்படப் பலர் பேசினார்கள்.

சிறுவர்கள் தாங்கள் பாதிக்கப்படும் பெற்றோர்களின் செயற்பாடுகள், வர்த்தக நிலையங்களில் வேலைபார்க்கும்போது ஏற்படும் பிரச்சினைகள் இவற்றினால் கல்விகற்க முடியாத நிலைகளை கலை நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தினர்.

(111)




# முரண்பாடுகளுக்குப் பயந்து போனால் ஒருபோதும் வெற்றியடைய முடியாது!

## பாராட்டு நிகழ்வில் முன்னாள் கல்விப் பணிப்பாளர்

வலி.தெற்கு,நவ.15

முரண்பாடுகளுக்கு நாம் பயந்து போனால் நிச்சயம் தோல்வி தான் ஏற்படும். எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனத்தை வெறுமனே நடத்த முடியாது. கண்டிப்போடு நிர்வாகத்தை நடத்தவேண்டி ஏற்பட்டால் அதனை செய்யத் தயங்கக் கூடாது. மாணவர்களுக்கு நாங்கள் ஒளியாக விளங்க வேண்டும்.

வலிகாமம் வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இவ்வாறு கூறினார்.

வலிகாமம் கல்விவலய அதிபர்கள் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் பதிலுரை வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ் விழாவுக்கு சண்டிலிப்பாய் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமை வகித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக நான் இருந்தபோது இணைப்பாடவிதான செயற்பாடுகள் பலவற்றில் வலய பாடசாலைகள் முதலிடம் பெறத்தக்கதாக அமைந்ததற்கு அதிபர்களின் கடுமையான உழைப்பே காரணமாக இருந்தது. அதிபர்களுடைய ஒத்துழைப்பு, மேலதிகக் கல்விப்பணிப்பாளரின் வழிகாட்டல்கள், கோட்டப் பணிப்பாளர்கள் தந்த ஊக்கங்கள், இறைவனின் பார்வை என்பன தான் நான் பரிசுத்தமான நிர்வாகத்தை நடத்தவும் பல அபிவிருத்தி வேலைகளை செய்து சாதனைகளை பெறவும் வைத்துள்ளன-எனக்கூறினார்.



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்பாராட்டுரை வழங்கியபோது தெரிவித்ததாவது:- பல்கலைக்கழக ஆய்வுகளின் அடிப்படையில் எமது மாவட்டக் கல்வி நிலையில் சிறிது சோர்வும் தொய்வும் ஏற்பட்டுள்ளது. எமது செயற்பாடுகள் பின்னடைந்து விட்டன. அதனை நிவர்த்தி செய்ய ஆற்றும் பணியே திருமதி இருதயநாதனுக்கு நாம் தரும் சேவை நலன் பாராட்டாக அமை யும் - என்றார்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தமது பாராட்டுரையில் -

நெருக்கடிகள் சூழ்ந்த நிலையிலும் கூட திருமதி றெஜினா இருதயநாதன் துணிவுடன் செயற்பட்டவர். பெரும் அல்லல்களின் மத்தியில் பல பாடசாலைகளின் செயற்பாடுகளை வழி நடத்தியவர். யுத்தகாலத்தில் ஒரு பெண் இவ்வாறு செயற்படுவது மிகவும் கடினமானது என்று கூறினார். தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி[illegible] பணிப்பாளர்கள் உட்பட பலர் பாராட்டுரை[illegible]களை நிகழ்த்தினர்.

(ப-152)

# சிறந்த முறையில் மேற்கொண்டால் சேமிப்புதான் வாழ்வின் மூலதனம்

## மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர்



சேமிப்பு வாழ்க்கையில் நாம் இடும் மூலதனம். இதனைச் சிறந்த் முறையில் மேற்கொள்வதன்மூலம், சமூக, கிராம மக்களின் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். இவ்வாறு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் து.ரகு தெரிவித்தார்.

சங்கானை மக்கள் வங்கியின் நடமாடும் சேவை அண்மையில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாணவர்களிடையே சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ரகு மேலும் தெரிவித்ததாவது:-

சங்கானை மக்கள் வங்கி மிகச்சிறந்த முறையில் மக்களுக்குசேவையாற்றுகின்றது. வலி. மேற்குப் பிரதேச மக்கள் சிறந்தமுறையில் மக்கள் வங்கியுடன் தமது தொடர்பினை ஏற்படுத்தியுள்ளனர். சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் கடன் பெற்றவர்கள் எவரும் இன்றுவரை திரும்பிச் செலுத்தவில்லை என்ற அறிவித்தல் எனக்குக் கிடைக்கவில்லை. இப்பிரதேச மக்கள் சேமிப்பை குறிக்கோளாகக் கொண்டவர்கள்; நாணயமானவர்கள். இந்தக் கிளையில் வைப்பிலிடப்படும் பணம் முழுவதும் இப்பிரதேச மக்களுக்கு பல வழிகளிலும் வழங்கப்படுகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களுக்கும், விவசாயிகளுக்கும் பல வழிகளிலும் உதவி புரிவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இன்று மாணவர்களிடத்தில் சேமிப்புப் பழக்கம் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. ஆதலால் ஆசிரியர்களும், பெற்றோர்களும் மாணவர்களிடத்தில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். இதனால் இவர்களின் எதிர்காலம் சுபீட்சம் நிறைந்த எதிர்காலமாக இருக்கும் என்பது நிச்சயம்.

வெளிநாடுகளில் இருந்து எமது பிரதேசத்துக்கு வந்து சேரும் பெரும் தொகையான பணம் அநாவசியமாக செலவழிக்கப்படுகின்றது. இளைஞர்கள் இந்த வெளிநாட்டுப் பணத்தை தேவையற்ற செலவுகளைக் செய்யாமல் மக்கள் வங்கியில் சிறிதுசிறிதாக சேமிப்பதன் மூலம் தமது எதிர்காலத் தேவைகளை பூர்த்தியாக்க முடியும் - என்றார்.

இந்த நடமாடும் வங்கிச் சேவையில் சிறு குழந்தைகளுக்கான ''இசுறுஉதான'' பாடசாலை மாணவர்களுக்கான ''சிசு உதான'' உட்படப் பல தரப்பட்ட வங்கிச் சேவைகள் இடம்பெற்றன.

சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை உட்பட இன்னும்பலர் வங்கிச் சேவைகள் பற்றிப்பேசினார்கள்.

(ப-275-204)

# குடும்பத்தவர்கள் முதியோர்களை அரவணைத்து நடத்தவேண்டும்

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் கருத்து

காரைநகர்,நவ.15

முதியோர்களைக் குடும்பத்தினர் அணைத்துப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் அவர்கள் முதியோர் இல்லங்களுக்குச் செல்லாது தடுக்க முடியும்.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி இவ்வாறு கூறினார்.

காரைநகர் மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தினரால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் முதியோர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

காரை மத்தி கிராம சேவையாளர் கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆ.சிவசுவாமி மேலும் கூறியதாவது:-

சிறுவர்களை 18 வயதிற்குக் குறைந்தவர்கள் என வரையறுக்கும் போதிலும் முதியவர்களின் வயது எது எனத் தீர்மானிக்க முடியாத நிலை உள்ளது. ஏனெனில், இங்கு நடைபெற்ற முதியோர்களுக்கான விளையாட்டு நிகழ்வில் 86 வயதிற்கு மேற்பட்ட பல ஆண், பெண் முதியவர்களும் ஓட்ட நிகழ்வில் இளையோர்கள் போன்று மன உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஓடியதை அவதானிக்க முடிந்தது - என்றார்.

இவ்விழாவில் தலைமை உரையாற்றிய கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம் தனது உரையில் -



முன்னைய காலங்களில் முதற் சந்ததியினருக்கு அடுத்த சந்ததியினர் அடங்கியவர்களாக மிகவும் மதிப்புக் கொடுப்பவர்களாக இருந்தனர். இன்று அந்தநிலை பெரிதும் மாறிவிட்டதென்றே கூறவேண்டும். இதன் காரணமாக வயோதிபர் அதிகளவு மனதினாற் பாதிக்கப்படுகிறார்கள்.

எப்பொழுதுமே வயதில் மூத்தோருக்கு அனுபவ அறிவு அதிகம். எழுத்தில் எழுதுவது செயன்முறைக்கு வரும்போது தான் ''எழுதுவது போல் செய்வது இலகுவல்ல'' என்பது விளங்கும். செயற்படுத்தும்போது எழக்கூடிய பிரச்சினைகள் அவற்றைத் தீர்க்கக் கூடிய வழி முறைகள் எல்லாம் அனுபவமுள்ளவர்களுக்கு அதிகம் தெரியும். அவர்கள் பழமைவாதிகளாக இருந்தாலும் பழமையில் புதுமை புகும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அறிவுரை கூறுவார்கள். எனவே, இளைஞர்கள் முதியவர்களின் அறிவுரைகளை ஒரேயடியாக எடுத்தெறிந்து பேசுவதும் கேலிசெய்வதும் தவறாகும் - என்றார்.

(ப-73)

# இறுதிக்காலத்தில் முதியவர்களை மதித்துப் பராமரிக்கவேண்டும்

வலி.தென்மேற்கு,நவ.15

எமது குடும்பங்களிலுள்ள முதியவர்களை மதித்து அவர்களின் இறுதிக் காலத்தில் பராமரிக்கவேண்டியது எமது கடனாகும். பிள்ளைகளைக் கஷ்ரப்பட்டு ஆளாக்கி நல்ல நிலைக்குக் கொண்டு வந்த முதியோரான பெற்றோர்களை அநாதரவான நிலையில் விடுவதும் முதியோர் இல்லங்களில் தங்கவிடுவதும் எமது பண்பாட்டிற்கும்கலாசாரத்திற்கும் ஏற்புடையதல்ல.

வலி.தென்மேற்கு ( சண்டிலிப்பாய்) பிரதேச செலயலகம் அண்மையில் நடத்திய சர்வதேச முதியோர் - சிறுவர் தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சண்டிலிப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

சிறுவர்களின் அடிப்படை உரிமை கல்வி தான். அதனைப் பெற்றோர்கள் உணர்ந்து பிள்ளைகளின் கல்விக்கான வசதிகளைச்செய்து கொடுக்கவேண்டியது அவசியம். இன்றைய சிறார்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு கல்வி மிகவும் இன்றியமையாதது. 14 வயது வரையாவது பிள்ளைகளை கல்விபெற விட வேண்டும் - என்றார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மனிதவள அபிவிருத்தி உதவி மாவட்டச் செயலர் க.கனகரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

முதியோரின் அனுபவங்களையும் ஆற்றல்களையும் இளம் சந்ததியினர் அறிந்து அவர்களை மதிக்கவேண்டும்.

முதியோரின் அறிவுரைகளைக் கேட்காமல் சிறுவர்கள் பலர் வழிதவறிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றியும் தமது கவனத்தை செலுத்தி அவர்களைப் பேணிப் பாதுகாப்பது பெற்றோரினதும் சமூகத்தினதும் கடனாகும் - என்றார்.

ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

மேற்கு உலக நாடுகள் பலவற்றில் முதியவர்கள் பராமரிப்பு இல்லங்களில் வைத்து பராமரிக்கப்படும் நிலை இருந்துவருகின்றது. ஆனால் எமது கீழைத்தேசங்களில் முதியோர்கள் வீடுகளில் வைத்து அவர்களின் இறுதிக்காலத்தில் அலைய விடாது பராமரிக்கும் பண்பாடு இருந்து வருகின்றது. தங்களை வீட்டாரும் சமுதாயமும் புறக்கணிக்க வில்லை என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டும். அவர்களை சுமையாக கருதாது பராமரிக்கக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம் என்று கருதி அரவணைத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது எமது கடமையாகும். உலகில் ஜப்பான் நாட்டில்தான் முதியவர்கள் நன்கு மதிக்கப்படுகின்றார்கள். அங்கு அவர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்பட்டு வருகின்றது என்றார்.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க.முதலியார், சண்லிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

முதியோருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட 28 வறிய நிலையிலுள்ள சிறுவர்களுக்கு சேமிப்புப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டன. நடனம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ப-135)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஒரு மாதம் பாவித்த புதிய D பிறிச்சர் (Deepreezer) விற்பனைக்குண்டு. தொடர்பு: அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால். தொ.பே.:0602212665. (சி-46212)

## வீடு வளவு விற்பனைக்கு

சுன்னாகம், ஏழாலை சூராவத்தை அம்மன் கோயிலுக்கு அருகில் 10 பரப்புடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஏ.வசந்தன், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. தொ.பே.: 2226306 (42847)

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்கு முன் பாக 4 ½ பரப்புக் காணியுடன் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனத்திற்கு உகந்த வீடு. தொடர்பு: R.P. ஜெயதாஸ் தொ.பே 222 3360 or 077-9597981. (42708)

## தவறிவிட்டது

அமிர்தலிங்கம் சிறீஸ்காந்தன் என்பவருடைய தே. அ. அ. (823044089V), மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அட்டை வேறு ஆவணங்கள் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கரணவாய் மூத்த விநாயகர் ஆலய அருகிலுள்ள வீட்டில் ஒப்படைக்கவும் or T.P. 0712 244318 என்னும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (42704)

## வீடு வாடகைக்குத் தேவை

வங்கி உயர் அதிகாரிக்கு நல்லூர்/கந்தர்மடம்/ யாழ்.பல்கலைக்கழகப் பகுதிகளில் இணைந்த குளியலறையுடன் கூடிய 3 அறைகளும் வாகனத்தரிப்பிடமும் ஏனைய வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. 3 மாத வாடகை முற்பணம் வழங்கப்படும். எதிர்பார்க்கும் வாடகை மற்றும் உத்தேச நிபந்தனைகளுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2749, மே/பா உதயன். (சி-46194)

## தேவை

1. தாதி பயிலுநர்
2. அலுவலகக் கணக்காளர்
3. காசாளர்
4. வரவேற்பாளர்

15ஆம், 16ஆம் திகதிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நேரம்: பி.ப 1 மணி (பு.நே)

இடம்: ENT MEDICAL CLINIC

(42707) முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். (21.45.17)

## சேவை

ஆங்கில மொழி பெயர்ப்பு (Sworn Translator) உள்நாட்டு, வெளி நாட்டுக்கான கடிதங்கள் வரைதல், பொலீஸ் முறைப்பாடு, சத்தியக் கடதாசி மற்றும் ஆங்கில வேலைகளுக்கு நாடுங்கள்:

**அ.இராமநாதன் J.P**

39/5, பிரம்படி ஒழுங்கை,
தலையாளி, கொக்குவில்.
தொலைபேசி: 021-222 -5124

(42643) (21.45.17)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் முதல் விநியோகிக்கப்படுகிறது. எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும் உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42489)

## சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( Green card) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு Internet மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். Penquin Bookshop, B2/F23, Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 . (சி-46218)

## வல்லிபுர ஆலய நிகழ்ச்சித் தொகுப்பு


யாழ்ப்பாணம்,நவ.15

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் பெருந்திருவிழா நிகழ்வின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ரூபவாஹினியின் 'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பப்படவுள்ளது.

நிகழ்வை ரூபவாஹினியின் உதவிப் பணிப்பாளர் இரா.நவீந்திரன் தொகுத்து வழங்குவார்.

(3-202)

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1933 05 27

இறப்பு 2004 11 15

அமரர்

## அந்தோனிப்பிள்ளை இராயப்பு

*ஆண்டவர் சன்னிதானம் அடைந்த எம் தலைவரே!*
*ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்துயர்*
*யாண்டும் உங்களை யாம் நினைத்திருப்போம்*
*வேண்டுவோம் உமையழைத்த இறைவனையே மன்றாடி.*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் இன்று(15.11.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:

தவசிகுளம். **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
மிருசுவில். **பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(42721)(51-16-11)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



*அமரர்*

## கார்த்திகேசன் செந்தூர்ச்செல்வன்

*(யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவன்)*

தோற்றம் 21.03.1984

மறைவு 03.11.2005

*பாசத்திற்கோர் தம்பி என்று வாயார அழைத்தோமே*
*தேசம் புகழ பலபட்டம் பெறுவாய் என்றிருந்தோம்*
*மாசற்ற உனைக்கொன்று கயவர்கள் எரித்தாரோ*
*பேசவாய் இன்றி மனங்கருகி கதிகலங்கி உருகுகின்றோம்*
*ஏன் இந்த ஊழ் என்று உனை நினைத்து ஏங்குகின்றோம்*
*புதுமையுள்ள குருநாதரும் உனைவிட்டு நின்றாரோ*
*என்றாலும் என் செய்வோம் அவர் பாதம் தஞ்சமென்று*
*உன் ஆத்மா சாந்திக்காய் தினம் வேண்டி நிற்கின்றோம்*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நாளை (16.11.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல உதவி புரிந்து துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

செந்தூர் பவனம்,
மாசேரி, வரணி. (42722) (39.45.17) **குடும்பத்தினர்.**

# ஈர விழிகளுடன் ஓராண்டில்



மண்ணில் உதயமாக 14 - 12 - 1982

இதயத்தில் இருப்பிடமாக 26 - 11 - 2004

## பாலையா நிர்மலகாந் (யூலி)

*திதி: 15.11.2005*

*தம்பியுமாய் என் நண்பனுமாய்*
*தரணியில் நீ வாழ்ந்தாய்*
*நிர்மலனாய் நீ இன்று*
*நிமலனடி சேர்ந்தாய்*
*பட்டம் பல பெற வேண்டும் எனத் துடித்தாய்!*
*பட்டமரம் போல் பாதியில் ஆனாய்*
*ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்*
*ஆறாத் துயருடன் பரிதவிக்கின்றேன்*
*உடன் பிறவா அண்ணன்*
*உடன் வராயோ ஒரு கணம் நிர்மலா!*

பாசமுடன்
கூழாவடி,
ஆனைக்கோட்டை. (42802) (21.45.17) **ந.நித்தி.**

# SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு

இது வரும் 2006 ஆம் ஆண்டு முடிவுக்குள் இலங்கையில் முழுமையான ஆங்கில அறிவினை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடநெறி. ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், தாதிகள், வங்கியாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைகழக ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி மற்றும் கணினி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், பெற்றோர் உட்பட எவரும் இந்த இலவச ஆங்கிலப்பாடநெறியில் சேரலாம்.

**இடம் : ரிம்மர் மண்டபம் (யாழ் மத்திய கல்லூரி அருகில்)**
**காலம் : 15.11.2005 செவ்வாய்க்கிழமை. இன்று (போயா தினம்)**
**நேரம் : 9.00 - 11.00, 11.00-1.00, 2.00-4.00, 4.00-6.00**
ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்

**இலவசம்!!! அனைவரும் கலந்துகொள்ளலாம்**

**இந்த இலவச வகுப்பில் 37 முதல் 48 வரையான பாடஅலகுகள் இலவசமாக வழங்கப்படும். புதிதாக கலந்துகொள்வோரும் வகுப்பில் இலவசமாக பதிவுசெய்து கலந்துகொள்வதோடு பாட அலகுகளையும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.**

**SAAMSTECH** இன் பாட விளக்கம்

1. அடிப்படை வசனங்கள் மூலமாக இலக்கண ரீதியான சிந்தனையின்றிய வசன உருவாக்க வேகத்தினை அதிகரித்தல்
2. அன்றாடம் கதைக்கும் வசனங்கள் மூலமான விருத்தியாக்கம், சொல்வளம் மற்றும் பழக்கப்படுத்தல்
3. பிரயோகங்கள் ( கதைத்தலுக்கு அடிப்படையான ஆனாலும் பாடசாலைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் கற்பிக்கப்படாததுமான ஒன்று )

**இன்று நடைபெறும் வகுப்பில் கதைத்தலுக்கு அடிப்படையான பிரயோகங்கள் (APPLICATIONS) முழுமையாக கற்பிக்கப்படும். இவை ஆங்கிலத்தில் முழுமையான தேர்ச்சி பெற்றவர்களுக்கும் அவசியமானதால் அனைவரும் கலந்துகொள்ளலாம்.**

**இந்த இலவச வகுப்பில் பதிவுசெய்து கற்போருக்கு வகுப்பு, பாடஅலகுகள், பரீட்சை மற்றும் சான்றிதழ் என்பன இலவசம்.**

மேலதிக விபரங்களுக்கு : SAAMSTECH, 841, Hospital Road, Jaffna. 233/4, Kasthuriyar road, Jaffna. 2229505, 4591571

# ஐப்பசி மாதத்தில் கார்த்திகை விளக்கீடா?

நவம்பர் 15இல் கார்த்திகைத் தீபம் ஏற்று பவர்கள் சைவர்களா என்ற கேள்வி எழுகிறது.

சகலரும் சுகமாக, மனத்திருப்தியுடன், சந்தோஷமாக வாழவேண்டும் என்பதற்காகவே கார்த்திகை தீபம் ஏற்றுகிறீர்கள். இதனால் நாட்டில் அபிவிருத்தி, அரசனுக்கும் மக்களுக்கும் நல்ல அதிர்ஷ்டம், தொற்றுநோய்கள் ஒழிதல், நல்ல மழைவீழ்ச்சி போன்ற நற்பலன்கள் நிகழும் என்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

**ஐப்பசியில் விளக்கீடு**

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாக ஐப்பசியில் விளக்கீடு என்று குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஐப்பசியில் கார்த்திகை விளக்கீடு வருமா? இல்லை என்று உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலும் அதனைப் பின்பற்றி வெளிவரும் மெய்கண்டான், அஷ்டலஷ்மி போன்ற கலண்டர்களிலும் ஐப்பசி மாதம் 29, நவம்பர் 15இல் சர்வாலய தீபம், வீடுகளில் தீபம் என்று பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சைவத் தமிழர்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் சுத்தப்பிழையான இந்நாளில் கார்த்திகை தீபம் ஏற்றலாமா?

பிழையான நாளில் விரத அனுஷ்டானத்தின் துர்பலன்கள் கிட்டும். சில விரதங்களைப் பிழையான நாளில் அனுஷ்டித்தால் விரதத்தின் பலன் கிடையாது. வேறு சில விரதங்களைப் பிழையான நாளில் அனுஷ்டித்தால் துர்பலன்கள் வரும். இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளவாறு டிசெம்பர் 17ஆம் திகதி

**கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு ஆதாரமாக கட்டுரையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆதாரச் செய்யுள்கள், மேற்கோள்கள் நாளைய உதயனில் வெளிவரும்.**

ஆருத்திரா தரிசனம் செய்யும் தர்மகர்த்தாவும் பூசகரும் நாசமடைவர் என்று சிவபெருமானால் கூறப்பட்டு ஆகமத்தில் இருப்பதாக 1967இல் இரகுநாதையர் வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. விவரங்களுக்கு ஆதாரம் 4ஐப் பாருங்கள்.

பழம்பெரும் நூல் காலப்பிரகாசிகையில் கூறப்பட்டுள்ள, பிழையான நாளில் கார்த்திகை தீபம் ஏற்றுவதன் துர்பலன்கள் ஆதாரம் 1இல் உள்ளன. 1986இல் வெளிவந்த யாழ்ப்பாணத்துப் பஞ்சாங்கங்களிலும் கார்த்திகை விளக்கீட்டில் ஒரு மாதப் பிழை இருந்தது. இப்பிழையான நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்குப் பலர் தீபம் ஏற்றினர். அதன் பின்னர் நிகழ்ந்த போர் பலரையும் பாதித்தது யாவரும் அறிந்ததே. இப்பிழையான நாளில் கார்த்திகை விளக்கீட்டுக்கு விளக்கு வைத்தவர்களில் பலருக்கு பின்னர் விளக்கு வைக்க வேண்டியதாயிற்று. இனிமேலும் பிழையான நாளில் கார்த்திகை விளக்கீடு அனுஷ்டிக்கலாமா? இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் பல ஆலய நிகழ்ச்சி நிரல்களில் அட்டவணை 1இல் உள்ள பிழைகள் திருத்தப்பட்டுவிட்டன.

நவம்பர் 15இல், இரகுநாதையர் வாக்கிய

## அது தேசத்துக்கும் தலைவனுக்கும் நல்லதல்ல

பஞ்சாங்கத்தில் உள்ளவாறு ஐப்பசி மாதம் 29இல் கார்த்திகை தீபம் ஏற்றுவது உங்களுக்கு நல்லதல்ல, தமிழர்களுக்கு நல்லதல்ல, தமிழர்களது நாட்டுக்கு நல்லதல்ல; தமிழர்களது அரசனுக்கு நல்லதல்ல, எவருக்கும் நல்லதல்ல. இந்தளவு துர்பலன்களை விளைவிக்கக்கூடிய பிழைகளை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் திருத்தாமல் இருப்பதன் நோக்கம் என்ன?

இப்பிழைகளை நிரூபிக்கப் பல ஆதாரங்கள் உள்ளன. ஏற்கனவே எழுதிய கட்டுரைகளில் சில ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் இன்றுவரை பிழையில்லை என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்கவுமில்லை. அவற்றைத் திருத்தவுமில்லை. குருவுக்கு உபதேசமா? என்று நீங்கள் கேள்வி கேட்கக்கூடிய ஆதாரமாக, தற்போதைய இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதரது குருவும் 1967இல் அப்பஞ்சாங்கத்தைக் கணித்தவருமாகிய இரகுநாதையர் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தின் சில பகுதிகளை இக்கட்டுரையில் சமர்ப்பித்து, அதனை மீறியது நிரூபிக்கப்பட்டுள்ளது. சிவனுக்கு உபதேசமா? சைவ சமயமா? என்று நீங்கள் கேள்விகள் கேட்கக்கூடிய ஆதாரங்களாக, சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமங்கள் உள்ளடக்கப்பட்டு, அவற்றை மீறியதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**சரசோதி மாலை**
**வேதாகமப் பிரமாணமா?**

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் தமது கணிப்புச் சரியென்று போடும் விளம்பரங்களில் சரசோதிமாலைப் பாட்டுகளை ஆதாரமாகக் குறிப்பிடுகிறார்கள். அதுவொரு ஆகமம் அல்ல. அது, அவர்கள் வெளியிட்டு விற்பனை செய்யும் ஒரு நூல். அவர்கள் கார்த்திகை விளக்கீடு சரியென நிரூபிக்கப் பயன்படுத்தும் பாட்டு ஆதாரம் 9இல் உள்ளது. அது, ''தேளாதவனிற்றிகழ்பூரணையி'' என்று ஆரம்பிக்கின்றது. தேள் என்ற அடையாளம் உள்ள விருச்சிக இராசியில், ஆதவன் எனப்படும் சூரியன் திகழ்கின்ற கார்த்திகை மாதப் பூரணை என்பதே இதன் அர்த்தம். கார்த்திகை விளக்கீட்டைக் கார்த்திகை மாதத்தில் அனுஷ்டிக்க வேண்டும் என்றே இப்பாடல் சொல்கிறது. இதன்படி, டிசெம்பர் 15ஆம் திகதியே சர்வாலய தீபம்.

அட்டவணை 1இல் உள்ள பிழைகளை நிரூபிக்க ஆகமங்களில் பல ஆதாரங்கள் உள்ளன.

சிவபெருமானால் அருளப்பெற்ற இந்த ஆகமங்களை மீறுவது சைவ சமயத்தவர்களுக்கு ஆகாது. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் தமது கணிப்புச் சரியென்று இன்றுவரை ஆகமப்படி நிரூபிக்கவில்லை. இந்த நிலையில், சைவ சமயத்தவர்கள் அப்பஞ்சாங்கத்தில் உள்ளவாறு நவம்பர் 15 இல் கார்த்திகை தீபம் ஏற்றலாமா? அந்தப் பிழையான நாளில் கார்த்திகை தீபம் ஏற்றுவது பாவம். அன்று ஏனையவர்கள் தீபம் ஏற்றுவதைப் பார்ப்பதும் பாவம்; அன்றைய கார்த்திகை தீப பூஜைக்கு போவதும் பாவம்; அந்த நாளில் கார்த் திகை தீபம் அனுஷ்டிக்கும் கோயில்களுக்குப் போவதே பாவம்.

**இந்து சமய கலாசார அமைச்சின் அறிக்கை**

திருவண்ணாமலையில் (ஆதாரம் 8) கார்த்திகை தீபம் டிசெம்பர் 13 இலும், சிதம்பரத்தில் (ஆதாரம் 6) ஆருத்திரா தரிசனம் 13-01-2006 இலும் நடைபெறவுள்ளது. இவ்விரதங்களை, இத்தினங்களிலேயே அனுஷ்டிக்குமாறு இந்து கலாசார அமைச்சு அறிவித்துள்ளது. திருவண்ணாமலையிலும், சிதம்பரத்திலும் எந்தப் பஞ்சாங்கம் பின்பற்றப்படுகிறது என்பதையும் அவர்களது அறிவித்தலில் குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

'இத்தினங்களை குறிப்பிடுகின்ற பஞ்சாங்கத்தை ஏனைய விரத நாள்கள், நல்ல நேரங்கள் பார்ப்பதற்கும் பயன்படுத்துவது சரியாக இருக்கும்' - என்றும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவண்ணாமலையிலும், சிதம்பரத்திலும் தமிழகத்தின் பிரபல்யமான வாக்கிய பஞ்சாங்கமாகிய பாம்பு பஞ்சாங்கமே பின்பற்றப்படுகிறது. வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் ஆலயங்களை ஆதாரமாகக் காட்டி, வேறொரு பஞ்சாங்கத்தைப் பின்பற்றுமாறு ஆலோசனை வழங்குவது தர்க்க சாஸ்திரப்படி (Logic) முரணானது.

திருந்தவேண்டும் அல்லது பிழைகளைத் திருத்தவேண்டும். இதில் ஆதாரமாகக் குறிப்பிட்டுள்ளவை இரகுநாதையர் வாக்கிய பஞ் சாங்கத்தினிடம் இல்லாமல் இருக்குமா? அவற்றைப் பார்த்துப் பிழைகளைத் திருத்தியிருக்கலாம்அல்லவா? இதில் உள்ள ஆதாரங்களைப் பார்த்து இனியாவது பிழை திருத்தம் அறி விக்கலாம் அல்லவா? பிழை திருத்தம் அறிவிப்பதன் மூலம், குரு வுக்கு உபதேசம் செய்யவில்லை எனவும், சிவனுக்கு உபதேசம் பண்ணவில்லை எனவும், சைவ சம யத்தவர் என்றும் இர குநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் நிரூபிக்கலாம்.

**ஆருத்திரா தரிசனம்**

இந்த வருடம் மார் கழி மாதத்தின் முற்பகுதியில் 17.12.2005 இல் ஒரு திருவாதிரையும், பிற்பகுதியில் 13-01-2006 இல் இன்னொரு திருவாதிரையும் வருகின்றன. இதனால், ஆருத்திரா தரிசனம் - திருவெம்பாவை பூர்த்தி என்ற சர்ச்சை எழுந்துள்ளது. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் முதலில் வரும் திருவாதிரையன்று 17-12-2005 இல் ஆருத்திரா தரிசனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரியென்று நிரூபிப்பதற்கு, மார்கழியில் இரு திருவாதிரைகள் வரும்போது, முதலில் வரும் திருவாதிரையன்றே ஆருத்திரா தரிசனம் செய்யவேண்டும் என்று சிவபெருமானால் அருளப்பெற்ற ஆகமங்களை ஆதாரமாகக் காட்டி நிரூபிப்பதே சைவ சமயத் தவர்களுக்கு அழகு. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் இன்றுவரை இவ்வாறு நிரூபிக்கவில்லை. ஏன் என்று தெரியுமா? பிற்பகுதியில் வருவதிலேயே ஆருத்திரா தரிசனமென ஆகமங்கள் கூறுகின்றன. சில ஆதாரங்கள் இதோ!

ஒரே மாதத்தில் இரு நட்சத்திரங்கள் வருமாயின் பின்னால் வருவதே கொள்ளத்தக்கது என்று குமாரதந்திரம் என்ற ஆகமத்தில் ஆருத்திரா தரிசனப் பகுதியில் இருப்பது ஆதாரம் 2இல் உள்ளது. பின்னால் வரும் திருவாதிரை 13-01-2006 இல் ஆருத்திரா தரிசனம் செய்வதே சரியானது. இரகுநாதையர் வாக்கிய பங்சாங்கத்தில் உள்ளவாறு டிசெம்பர் 17இல் ஆருத்திரா தரிசனம் செய்வது பிழை என்று இந்த ஆகமம் நிருபிக்கின்றது.

ஆதாரம் 3இல் உத்தர காரண ஆகமத்தின் ஒரு பகுதி உள்ளது. மார்கழியின் முற்பகுதியில் வரும் திருவாதிரை, பூரணையுடன் சேர்ந்தும், பிற்பகுதியில் வருவது பூரணை சம்பந்தம் இல்லாது வந்தாலும், பிற்பகுதியில் வருவதிலேயே ஆர்த்திரா தரிசனம் என்று சுலோகம் 4 கூறுகின்றது. மார்கழியின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் திருவாதிரை வரும்போது, முற்பகுதியில் வருவதில் ஆருத்திரா தரிசனம் செய்வது, எஜமானனுக்கு கெடுதலை உருவாக்கும் என்று சுலோகம் 5கூறுகின்றது. மார்கழியின்பிற்பகுதியில் 13-01-2006 இல் வரும் திருவாதிரையன்று ஆருத்திரா தரிசனம் செய்ய வேண்டும் என்றும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளவாறு, முற்பகுதியில் டிசெம்பர் 17இல் வரும் திருவாதிரையன்று ஆருத்திரா தரிசனம் செய்வது எஜமானனுக்குக் கெடுதலை உருவாக்கும் என்றும் இந்த ஆகமம் கூறுகின்றது.

1967 இல் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கணித்த இரகுநாதையர் வெளி யிட்ட துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதி ஆதாரம் 4 இலும் 5 இலும் உள்ளன. 2 நட்சத் திரங்கள் வரும் போது, பிந்தியதில் நடேசரபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் இதனை மீறினால், கர்த்தாவும் ( எஜமானும்) போக்தாவும் ( பூசகரும்) நாசமடைவர் என்று காமிக ஆகமத்தில் இருப்பதாக ஆதாரம் 4கூறுகிறது. இவ்விதி, இவ்வருடஇரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் மீறப்பட்டு, டிசெம்பர் 17 இல் ஆருத்திரா தரிசனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியிருந்தும் தனது கணிப்புச் சரியானது என்று தற்போதைய இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க கணிதர் விளம்பரப்படுத்துகிறார். இதனை குருவுக்கு உபதேசமா என்று கேட்பீர்களா? அல்லது சிவபெருமானுக்கே உபதேசமா என்று வினாவுவீர்களா? அல்லது சிவபெருமான் அருளிய ஆகமத்தை மீறுபவர் சைவ சமயத்தவரா? என்று சந்தேகப்படுவீர்களா?

**சர்வாலய தீபம்**

குமாரதந்திரம் என்ற ஆகமத்தில் கார்த்திகை தீபம் பற்றிக் கூறப்பட்டிருப்பது ஆதாரம் 7 இல் உள்ளது. கார்த்திகை மாதப் பௌர்ணமி திதியிலும், பரணி, கார்த்திகை, ரோகிணி ஆகிய நட்சத்திரங்களிலும் தீபம் ஏற்றி வழிபடலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. இவை யாவும் கார்த்திகைத் தீபம் என்றே சொல்லப்படும். இலங்கைக்கும் தமிழகத்திற்குமிடையில் கார்த்திகை தீபத்தில் சிறிய வேறுபாடு உள்ளது. தமிழகத்தில் மலையும் மலை சார்ந்த இடங்களிலும் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தன்று கார்த்திகை தீபம் ஏற்றப்படும். கடலும் கடல் சார்ந்த இடங்களிலும் கார்த்திகை மாதப் பௌர்ணமி திதியன்று சர்வாலய தீபம் ஏற்றப்படும்.

இலங்கையில் முருகன் ஆலயங்களில் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபம் நடைபெறும். கார்த்திகை மாதப் பௌர்ணமியன்று சர்வாலய தீபம், வீடுகளில் தீபம் நிகழும்.

குமாரதந்திரம் என்ற ஆகமத்தில் (ஆதாரம் 7இல்) கார்த்திகை மாதத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கார்த்திகை மாதத்திலே தீபம் ஏற்ற வேண்டும் என்றுதான் ஏனைய ஆகமங்களும் கூறுகின்றன.

கார்த்திகை மாத இறுதி நாளாகிய டிசெம்பர் 15 இல் பௌர்ணமி திதி இருக்கிறது. அன்றுதான் சர்வாலய தீபம், வீடுகளில் தீபம். கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி திதி இருக்கும்போது, சர்வாலய தீபத்தை ஐப்பசியில் அனுஷ்டிக்க வேண்டும் என்று எந்தவோர் ஆகமத்திலும் இல்லை. எனவே, சர்வாலய தீபம், வீடுகளில் தீபம் நவம்பர் 15 என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டிருப்பது பிழையானது.

இவ்வருடம் கார்த்திகை மாத முற்பகுதியில் நவம்பர் 16இல் ஒரு கார்த்திகை நட்சத்திரமும் பிற்பகுதியில் டிசெம்பர் 13 இல் இன்னொரு கார்த்திகை நட்சத்திரமும் வருகின்றன. இதனால், திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபம் எப்போது என்ற சர்ச்சை கிளம்பியுள்ளது.

### அட்டவணை 1

| | பிழையான விரதநாள் | சரியான விரதநாள் |
|---|---|---|
| சர்வாலய தீபம் | 5-11-05 - ஐப்பசி 29 | 15-12-05 - கார்த்திகை 30 |
| வீடுகளில் தீபம் | 15-11-05 - ஐப்பசி 29 | 15-12-05 - கார்த்திகை 30 |
| குமராலய தீபம் | 16-11-05 - கார்த்திகை 01 | 13-12-05 - கார்த்திகை 28 |
| திருக்கார்த்திகை விரதம் | 16-11-05 - கார்த்திகை 01 | 13-12-05 - கார்த்திகை 28 |
| விஷ்ணு தீபம் | 17-11-05 - கார்த்திகை 02 | 14-12-05 - கார்த்திகை 29 |
| விநாயக விரதாரம்பம் | 16-11-05 - கார்த்திகை 01 | 16-12-05 - மார்கழி 01 |
| விநாயகஷஷ்டி விரதம் | 06-12-05 - கார்த்திகை 21 | 05-01-06 - மார்கழி 21 |
| திருவெம்பாவை பூஜாரம்பம் | 08-12-05 - கார்த்திகை 23 | 04-01-06 - மார்கழி 20 |
| ஆருத்திரா தரிசனம் - திருவெம்பாவை பூர்த்தி | 17-12-05 - மார்கழி 02 | 13-01-06 - மார்கழி 29 |

ஆதாரம் 5 ஐப் பாருங்கள். ஒரு மாதத்தில் 2 நட்சத்திரங்கள் வரும்போது பிந்தியதையே கொள்ள வேண்டும் என்பது பொதுவிதி என்று 1967 இல் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கணித்த இரகுநாதையர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பொது விதிக்கு திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபம் விதிவிலக்கல்ல. இவ்வாதாரம், முதலில் வரும் கார்த்திகை நட்சத்திரமாகிய நவம்பர் 16 இல் திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபம் பிழை என்று நிரூபிக்கிறது.

இவ்விரதங்களுக்குரிய சரியான தினம் டிசெம்பர் 13 ஆம் திகதி என்பதை ஆதாரம் 5 தெட்டத் தெளிவாக நிரூபிக்கிறது. ஆதாரம் 8 இல் உள்ளவாறு, பாம்புப் பஞ்சாங்கத்தில் (வாக்கியம்) குறிப்பிட்டபடி டிசெம்பர் 13 இல் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் நிகழவுள்ளது.

**கௌசிகர்**
**(தமிழ்த்தாய் நாட்காட்டிக் கணிப்பாளர்)**

கார்த்திகை மாதத்தின் முற்பகுதியில் பௌர்ணமியுடன் சேர்ந்து ஒரு கார்த்திகை நட்சத்திரமும், பிற்பகுதியில் சங்கிராந்தி தோஷமின்றி இன்னொரு கார்த்திகை நட்சத்திரமும் வரும்போது, கார்த்திகை மாத முற்பகுதியில் சர்வாலயதீபமும், பிற்பகுதியில் திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபமும் வரும். இவ்வாறு கடந்த காலங்களில் வந்தபோது யாழ்ப்பாணத்துப் பஞ்சாங்கங்களில் இவ்விரதங்கள் தவறுதலாக முற்பகுதியில் குறிக்கப்பட்டிருந்தன. வருங்காலத்தில் இத்தவறுகளை திருத்திக்கொள்வது நல்லது.

**விஷ்ணுவாலய தீபம்**

கார்த்திகை மாத ரோகிணி நட்சத்திரத்தன்று விஷ்ணுவாலய தீபம். இரகுநாதைய வாக்கிய பஞ்சாங்கத்தில் குமராலய தீபம் பிழை என்று நிரூபித்தது போன்று விஷ்ணுவாலய தீபமும் பிழை என்று நிரூபிக்கலாம். டிசெம்பர் 14ஆம் திகதியே விஷ்ணுவாலய தீபத்திற்குரிய சரியான தினம்.

வைஷ்ணவ வழிபாடு மிகவும் சிறப்பாக [illegible]பெறும் தமிழகத்தில் சற்று வித்தியாச[illegible] விஷ்ணுவாலய தீபம் நடைமுறையில் உளளது. பூரணை திதி சூரிய அஸ்தமனத்தில் இருக்கும் நாளன்று ஸ்ரீ வைகானஸ தீபம் நிகழும். ஸ்ரீ பாஞ்சராத்திர தீபத்திற்கு சூரிய அஸ்தமனத்தில் பௌர்ணமி இருக்கும் நாளன்று பரணி நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் இருக்கக்கூடாது. இவை இருப்பின் மறுநாளே பாஞ்சராத்திர தீபம். இவ்வருடம் இவ்விரு தீபங்களும் ஒரே நாளில் டிசெம்பர் 15 இல் வருவதை ஆதாரம் 8இல் பாருங்கள்.



## பயிற்சிக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,நவ.15

திருமறைக் கலாமன்றத்தின் இளையோர் மன்றத்தினரால் இளைஞர் யுவதிகளுக்கான முழுநாள் பயிற்சிக் கருத்தமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இளையோர் மன்றத் தலைவர் ஜோ.ஜெஸ்ரின் தெரிவித்தார். (ஜ-190)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
பொன்னுத்துரை சுபேந்திரன்
(ராசன்)

எம் குடும்ப குல விளக்காய்
வாழ்ந்தாய்!
எமை விட்டுப் பிரிந்து எங்கு நீ
சென்றாய்?
காலம் கரைந்து யுகம் கோடி
ஆனாலும்
எம் நெஞ்சோடு எப்போதும் நீ
வாழ்வாய்!

நாளை (16.11.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

செல்லாச்சியம்மையார் வீதி,
சுன்னாகம். (42733)(32-42-45-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி கலா நமசிவாயம் அவர்களினது அன்புத் தாயார்
**புனிதவதி நமசிவாயம்**
அவர்களின் மறைவையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்,
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் கழகம்,
(46787)(32-11-34) யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை - கரவெட்டி
சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் - 2006

மேற்படி விடயமாக 09.11.2005 ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகையை கீழே அட்டவணையில் குறிப்பிட்டவாறு திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|
| நெல்லியடி உபஅலுவலகம் கோவிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 16,500.00 |
| உடுப்பிட்டி உப அலுவலகம் அந்திரான் சந்தை | 15,000.00 |
| உடுப்பிட்டி சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம். | 33,000.00 |

திரு-சி-வே-குலநாயகம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
14.11.2005 (வி/46219)(42-32-34-11)

## ஆள்கள் தேவை

1. காவலாளி
2. சமையல் உதவியாளர்

[முன் அனுபவத்துடன்]
உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.
நேரம் : 11.00 - 1.00 வரை
திகதி: 19-11-2005.

கொசி ரெஸ்ரோரன்ட்,
15, சிறாம்பியடி ஒழுங்கை,
(ஸ்ரான்லி வீதி ஊடாக),
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021-222 5899.
(A/46227) (32-34-11)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி கலா நமசிவாயம் அவர்களின்
அன்புத் தாயார்
**புனிதவதி நமசிவாயம்**
அவர்களின் மறைவையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
(A/46223) (32-11-34)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 - 01 - 1927



உதிர்வு 15 - 11 - 2000

அமரர் குணரத்தினம் செல்வத்துரை
[முன்னாள் அதிபர், பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாசாலை, பிரபல பரம்பரை சித்த வைத்தியர்]
திதி: 21.10.2005 சதுர்த்தி

தன்னுயிர் போல் எமைக்காத்து
வையத்தில் நற்பிள்ளைகளாய்
விளங்க வைத்தீர்
ஆண்டு ஐந்து கழிந்தாலும்
உங்கள் திருமேனி அழிந்தாலும்
எங்கள் அப்பா, உங்கள் பெயர்
நிலைத்திடவே வையத்தில் நாம் வாழ்வோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர் செல்வத்துரை ஞாபகார்த்த
வைத்தியசாலை,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (46730)(46-32-11-34)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மந்துவில் குமக்களைக் குளம் தூர்ந்து போகும் நிலையில்

தென்மராட்சி,நவ.15

மந்துவில் பகுதி மக்களின் நீண்டகாலப் பாவனையில் உள்ள குமக்களைக் குளம் தூர்ந்துபோகும் நிலையில் காணப்படுகிறது.

கடந்த 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் படையினர் இந்தக் குளத்தைச் சுற்றி மண் அணை அமைத்திருந்தனர். மண் அணைகள் கரைந்து குளத்தினுள் சென்றதால் தூர்ந்துபோகும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்தக் குளத்தை ஆழமாக்குமாறு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லை என அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். (3-117)

## நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05 - 01 - 1943



மறைவு 04 - 10 - 2005

அமரர் நாகேஸ்வரி தென்னக்கோன்
(ராணி)

04.10.2005 அன்று அமரத்துவமடைந்த எமது குலவிளக்கு அமரர் நாகேஸ்வரி தென்னக்கோன் அவர்களின் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று [15.11.2005] செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் நடைபெறும் அந்தியேட்டியிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

89/1, கண்டி வீதி,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (42728)(32-11-34)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி பொன்னுத்துரை பறுவதாம்பாள்**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பறுவதாம்பாள் அவர்கள் சென்ற சனிக்கிழமை (12.11.2005) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் யசோதராதேவி (வவுனியா), தமயந்திதேவி (இணுவில்), தற்பராதேவி (யாழ்ப்பாணம்), லோகநாதன் (கனடா), தனலட்சுமி (ஜேர்மனி), கருணாதேவி (ஜேர்மனி), சாந்தநாயகி (கனடா), தர்மேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தாயாரும் ஜெகநாதன் (காலஞ்சென்றவர்), பரமேஸ்வரன் (இணுவில்), தில்லைநடராஜா (J/79, கிராம உத்தியோகத்தர்), கௌசல்யா, அபயவரதன், அமிர்தலிங்கம், அருளழகன், மனோகரன் ஆகியோரது பாசமிகு மாமியாரும் செல்வராணி, தேவராஜ், அபிராமி, யுவராஜன், அபிராமி, லக்ஷன், லுக்சி, ஹரி, வினுஷ்யா, பானுகோபன், வினித்தா, அருண், ஆதவன், செந்தூரன், நிலானி, பாரத், பிரதீபன், மயூரன் ஆகியோரது பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2005) செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில். (42726)(32-11-34)

தகவல்:
ந.பரமேஸ்வரன்
(மருமகன்).

## வீணை சங்கீத பூஷணம் அமரர் சி.ஆறுமுகம்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த இசைக்கலை மேம்படுத்தல் ஆரம்ப நிகழ்வு



கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் மேற்படி நிகழ்விற்கு தங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தலைவர்:- திரு.அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர், தலைவர், அமரர் சி.ஆறுமுகம்பிள்ளை ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம்)

காலம்:- 15.11.2005 செவ்வாய்க்கிழமை
பி.ப.3.30 மணிக்கு.

இடம்:- கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கம்.

சம்பியன் லேன்,
கொக்குவில். (A/46219)(32-34-11)

-அமரர் சி.ஆறுமுகம்பிள்ளை
ஞாபகார்த்த நம்பிக்கை நிதியச் செயற்குழு.

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 - 04 - 1930



மறைவு 16 - 09 - 2005

அமரர்
**தம்பையா ஆனந்தரத்தினம்**

## 30 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 - 05 - 1972



மறைவு 10 - 10 - 2005

செல்வி
**சிவரஞ்சினி ஆனந்தரத்தினம்**

பிரியோம் என நினைத்தோம் - உங்களை
பிரிந்தோம் எனத் துடிக்கிறோம்
உங்களை நினையாமல் நாம் -வாழ்வது
இந்த ஜென்மம் முழுவதும் அது முடியாது
'நல்லவர்கள் வாழ்வதில்லை -இது நானிலத்தின்
தீர்ப்பு' என்று சொல்லிவைத்தார் அன்று
அதை எண்ணுகின்றோம். எம்மை தேற்றுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

வட்டுக்கோட்டை. (42723)(18-32-34-11) குடும்பத்தினர்.

## யாழ்.நகரப் பகுதியில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.15

"வன்முறை வேண்டாம்", "ஜனநாயகத்தைக்காக்க வன்முறைக்கு எதிராக வாக்களியுங்கள்" என்ற வாசகங்கள் கொண்ட தமிழ், ஆங்கில மொழிகளிலான சுவரொட்டிகள் யாழ்.நகரில் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலையொட்டி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் என்ற அமைப்பு இச்சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளது. (3-173)

# ஈரவிழிகளுடன் மூன்றாண்டு நினைவில்

மண்ணகம் 25 - 08 - 1930



விண்ணகம் 19 - 11 - 2002

## அமரர் நயினை விஸ்வலிங்கம் இராசதுரை (பத்தர்)

**திதி: (15.11.2005) கார்த்திகை**

ஆண்டு மூன்று மறைந்தாலும் - உங்கள்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது
தினமும் உங்களை நினைந்து நினைந்தே
ஈர விழிகளுடன் நினைவில் நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(42744) (54-13-15)

நீங்காத நினைவில்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைந்த எம் தீவகக் கல்வி வலய
கல்விப் பணிப்பாளரை நினைவு கூருகின்றோம்



அமரர்
## பொன்னுத்துரை வேணுகோபாலவாணிதாசன்

வாணிவிழாவிலே எமையெல்லாம்
வாழ்த்திச் சென்ற பெருந்தகையே
வேணுகோபாலவாணிதாசனே
எப்படி மறப்போம் உமை?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணீருடன் நினைவுகூரும்...
உத்தியோகத்தர்கள்.
வலயக்கல்வி அலுவலகம், தீவகம்.

(42742) (54-13-15)

# கண்ணீர்ப் பூக்கள்

*எமது இரசாயனவியல் ஆசான் கலா அவர்களின்*
*அன்புத் தாயார்*

## திருமதி புனிதவதி நமசிவாயம்

*அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன் னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

13[1], 2006 உயிரியற் பிரிவு மாணவர்கள்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

(42747) (54-13-15)

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கம்**
**யாழ்ப்பாணம்**

# முழு நிலா நாள் கருத்தரங்கு

## தொடர் - I

காலம் : இன்று 15.11.2005 செவ்வாய்க்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி
தலைமை : பேராசிரியர் கா.குகபாலன் உபதலைவர் ப.மா.ச
கருத்துரை : மகாலிங்கம் சுதர்சன் (LL.B (SL) LL.M)
(monash) விரிவுரையாளர், சட்டத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.
பொருள் : மனிதஉரிமையும் பெண்கள்தொடர்பான அண்மைக்காலசட்ட வளர்ச்சியும்.

**ஆர்வலர்கள் அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்**

ரி. அருணகிரிநாதன்
செயலாளர்
(42226) (54-13-15)
யா. இ.ப.மா.ச.
க. பரமேஸ்வரன்
தலைவர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

# 3ஆம்ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 03 - 1910



மறைவு 18 - 11 - 2002

## அமரர் சின்னத்தம்பி இரத்தினம் பத்தர்

திதி :சதுர்த்தசி

ஆண்டு மூன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈராண்டு உமது நினைவுடனேயே நாமிங்கு வாழ்கின்றோம்
எங்கு பார்த்தலும் உங்கள் திருமுகம் தான்தெரிகிறதே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

கலைமகள் வீதி, கல்வியங்காடு. (42741) (33-54-13-15)
*இ.தங்கேஸ்வரன் [மகன்],*
*குடும்பத்தினர்.*

# கதிர்காமரைக் கொன்றது ஜே.வி.பி. என ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு

கொழும்பு, நவ.15

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றியவரான லக்ஷ்மன் கதிர்காமரை ஜே.வி.பியினரே படுகொலை செய்தனர்என்று புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைதிக்கான ஐரோப்பிய தமிழர் முன்முயற்சி அமைப்பின் சார்பில் இந்த முறைப்பாடு அடங்கிய மகஜர் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கையளிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பின்னர் தமது அரசியல் அபிலாசைகளுக்கு லக்ஷமன் கதிர்காமர் தடையாக இருப்பார் என்பதால். ஜே.வி.பியினர் அவரைப் படுகொலை செய்துள்ளனர்.

தமது கவனத்துக்கு வராமல் ஜே.வி.பியுடன் எவ்வித சந்திப்புகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று லக்ஷ்மன் கதிர்காமருக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டிருந்தார்.

இருப்பினும் சந்திரிகாவின் அரசியல் சகாப்தம் முடிவடைவதால் ஜே.வி.பியுடன் கதிர்காமர் நெருக்கமான உறவுகளையே கொண்டிருந்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டு இரு மணிநேரம் கழித்தே பொலீஸார் அவரது இல்லத்திற்குச் சென்று சோதனை செய்தனர். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன.

ஸ்கொட்லாண்ட்யார்ட் புலனாய்வுத் துறையினர் இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்த முன் வந்தபோது சந்திரிகா குமாரதுங்க மௌனம்காத்தார்.

கதிர்காமர் படுகொலையை காரணம் காட்டி விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் பயணத் தடையை விலக்க வேண்டும். இந்த முடிவு ஒருதலைப்பட்சமானது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும் அமைதி முயற்சிகள் தொடரவும் ஐரோப்பிய ஒன்றியமானது விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைக்கக்கூடாது. இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்படவேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் மீதான படுகொலைகள் தொடர்பாக சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்-இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-203)

# பாரபட்சமின்றி உதவ நீலங்காடு மக்கள் வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்,நவ.15

காரைநகர் நீலங்காடு கிராமத் திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகள் பாரபட்டமின்றிக்கிடைக்க ஆவணசெய்யுமாறு காரைநகர் உதவி அரச அதிபருக்கு நீலங்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை சங்கம் உதவி அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவ நடவடிக்கையின் காரணமாக 1990 ஆம் ஆண்டு நீலங்காடு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னும் மீளக்குடியமரமுடியவில்லை. நீலங்காடு கிராமம் உதி உயர் பாதுகாப்பு வலய எல்லைக்குள் இருப்பதால் அம்மக்கள் காரைநகரின் அயல் கிராமங்களில் தற்காலிகமாக வசித்து வருகின்றார்கள். இவர்களுக்கு உலர் உணவு முத்திரை தொண்டு நிறுவனங் களால் வழங்கப்படும் உதவிகள் சில குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதும் பல குடும்பங்களுக்கு இது போன்ற உதவிகள் கிடைக்கவில்லை. தரவு வழங்களில் உள்ள குறைபாடே இதற்குக் காரணம். எனவே, இனிமேலாவது நீலங்காடு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட எமது குடும்பங்களுக்கு அரச உதவியோ, தொண்டு நிறுவனங்களின் உதவியோ சகலருக்கும் பாரபட்சமின்றி கிடைக் கத்தாங்கள் ஆவண செய்ய வேண்டு மென தங்களை மிகவும் பணிவாகக் கொட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

கர்த்தருக்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள் (வெளி14:13)

## *திருமதி இரத்தினேஸ்வரி வீரசிங்கம்*

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி வீரசிங்கம் நேற்று (14.11.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.வீரசிங்கம் அவர்களின் மனைவியும் Dr.சரவணபவன் (ஓமான்), ஈஸ்வரி சிவனேஸ்வரி (ராஜினி), (பெத்தனியா சுவிசேஷ சபை ஆணைக்கோட்டை),ஜெகதீஸ்வரி (ஆசிரியஆலோசகர் வலிகாமம்), ஈஸ்வரன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும். சிவகுமாரன் (லக்சாலா ஓய்வு பெற்றவர்) அருள்மயம் (கஜறாம்ஸ் தொலைத்தொடர்பு சித்தன்கேணி), Dr.லக்மினி (மாத்தளை), மனோன்மணி (சுவிஸ்லாந்து), ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜந்தன், சங்கப்பர், மதுபாஷனி, றம்மியா, ரகுராம், சுயந்தன், (சுவிஸ்லாந்து), ஜஸ்மின் (சுவிஸ்லாந்து), ஜோனத்தான் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (15.11.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று கானான் ஜெப ஆலய சேமக்காலையில் (இராச வீதி கோப்பாய்) அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போதகர்கள், விசுவாசிகள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

*நாவலடி கோவில்லேன்,*
*வட்டுக்கோட்டை மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*
(42745) (54-13-15)
*தகவல்:*
*துகமூர்த்தி சிவகுமாரன் (மருமகன்).*

## *திருமதி பராசக்தி இராசையா*



**(இளைப்பாறிய ஆசிரியை-யா/நல்லூர் ஸ்தான C.C)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இ.பராசக்தி அவர்கள் 11.11.2005 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார். அன்னார் அமரர் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு மரகத்தின் மகளும், காலஞ்சென்ற பொன்னையா அன்னப்பிள்ளை அவர்களின் மருமகளும் திருமதி திலகநாதன் சுகந்தி (U.K), திருமதி கோபால கிஷ்ணன் யசோதா (ஜேர்மனி), கஜந்தன் (U.K), ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர்கள் அன்னலட்சுமி, பாக்கியம் மற்றும் சரஸ்வதி, விஸ்வநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), அமரர் பத்மநாதன், மாணிக்கவாசகர் (காரியாலய உத்தியோகத்தர் - வைத்தீஸ்வராக் கல்லூரி), சிவசோதியம்மா (ஜேர்மனி), ஆகியோர்களின் சகோதரியும், யமேஷ், பவித்திரன், சரணியன், ராகுலன், றாஜீவன் ஆகியோர்களின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துபாத்தி இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*88, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை.*
(42749) (54-13-15)
*தகவல்:*
*- குடும்பத்தினர்*

## *திருமதி செல்வரத்தினம் இராசையா*



கைதடி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் இராசையா அவர்கள் நேற்று (14.11.2005) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி சேதுப்பிள்ளை அவர்களின் ஆசை மகளும் சரவணமுத்து இராசையாவின் (ஸ்ரீ கணேசா ஸ்டோர்ஸ்) பாசமிகு மனைவியும் அமரர்களான சரவணமுத்து-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புச் சகோதரியும், வேலுப்பிள்ளை பரஞ்சோதியம்மா, அமரர் வேலாயுதர் மற்றும் தெய்வேந்திரராணி, திருமதி அன்னம்மா வீரகத்தி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.11.2005) பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊற்றலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி.*
(42748) (54-13-15)
*தகவல்:*
*கணவன்*

## *கந்தப்பு வேலுப்பிள்ளை*



நெடுந்தீவு கிழக்கு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் கந்தப்பு வேலுப்பிள்ளை 11.11.2005 வெள்ளிக் கிழமை சென்னை அம்பத்தூரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தப்பு- நாகமுத்து தம்பதியரின் மகனும் சென்னை அம்பத்தூரில் வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த இளைப்பாறிய நெசவு ஆசிரியை சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் சங்கரப்பிள்ளை (யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் தவராஜன் (சுவிஸ்), கேதீஸ்வரராஜன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் வசந்தி (சுவிஸ்) ஜெயந்தி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சுரேஸ் (சென்னை) ஜோஷா ஜெமிரா, ஜோயல், ஸ்ரெபான்திவ்யா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை அம்பத்தூரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*20, பி.ஏ.தம்பி லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(42851) (54-13-15)

வே.கேதீஸ்வரராஜன்
0041323410475 (சுவிஸ்)
வே.தவராஜன்
0041627943588 (சுவிஸ்)

## படைகளை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் உள்ளூர் விமான சேவையை வழங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றின் விமானங்கள் மூலம் இந்த 300 பேரும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஓய்வுபெற்ற நான்கு பாதுகாப்புப்படைஉயர் அதிகாரிகள் அரசுடன் இணைந்து செய்து வருகின்றனர்.

- இவ்வாறு நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:-

இத்தேர்தலில் பிரதமர் தோற்றுப்போகப் போவதை உணர்ந்துகொண்ட அவரின் தரப்பு, வாக்கு மோசடிகள்மூலம் வெற்றியடையத் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. அத்திட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தில் வாக்காளர்களை வாக்களிக்கவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படவுள்ளன. படையில் இருந்து விலகிய 300 பேர் இந்த நாசகார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இவர்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வாக்களிக்க வரும் வாக்காளர்களை வரவிடாமல் தடுத்தல், அவர்களின் வாக்காளர் அட்டைகளைப் பறித்தல், வாக்குச் சாவடிகளில் குழப்பங்களை உண்டு பண்ணுதல் உள்ளிட்ட பல தேர்தல் வன்முறைகளில் இறங்கவுள்ளனர்.

அரசின் திட்டப்படி இத்தேர்தல் வன் முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றால் அதற் கான முழுப்பொறுப்பையும் பாதுகாப்பு அமைச் சும் முப்படையினருமே ஏற்கவேண்டும்.

இவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லவிருக்கும் தனியார் விமானசேவை நிறுவனம் இவர்களை அழைத்துச் செல்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

- இவ்வாறு சரத் முனசிங்க கூறினார்.(க)

## பொது அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து பொது அமைப்புகளைச் சார்ந்தோர் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டனர்.

மாணவர் அமையத்தின் தலைவர் எஸ். சதீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமை உரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் சி.விஜயரூபன், பல்கலை ஆசிரியர் சங்கத்தின் சார்பாக பேராசிரியர் சிவானந்தமூர்த்தி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் சார்பாக சுகந்தன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் சார்பாக சி.தங்கராஜா, பொது அமைப்புகளின் ஒன்றியம் சார்பாக சாவகச்சேரி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் அருந்தவபாலன், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், மா.க. ஈழவேந்தன் மற்றும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் சார்பாக பேணாட் கொலின், சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை சார்பாக செ. ரவீந்திரன் ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் அவசியம் தொடர்பாக உரை நிகழ்த்தினர்.

ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்புத் தொடர்பாக பொது அமைப்புக்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தொகுக்கப்பட்டு நீண்ட அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது தொடர்பான பிரகடனம் வெளியிட்டுவைக்கப்பட்டது.

அறிக்கையையும், பிரகடனத்தையும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் இ.கோகுலரூபன் வெளியிட்டு வைத்து வாசித்தார்.

இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக பேராசியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (த-12)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் பேராசிரியர் டீ. அத்தபத்து மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விரிவுரையாளர் ஆரியவன்ஸ திஸாநாயக்க ஆகியோரால் இந்த ஆய்வு கடந்த 28 நாள்களாக வடக்கு - கிழக்கு தவிர்ந்த 14 மாவட்டங்களில் 48 தேர்தல் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன.

ரணிலுக்கு வாக்களிக்க 52.85 வீதமானோரும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க 47.15 வீதமானோரும் விருப்பம் தெரிவித்துள்ளனர் என இந்தக் கருத்துக் கணிப்பின் இறுதி முடிவு சுட்டிக்காட்டுகின்றது.

அதேவேளை, தாங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பது என்று இன்னும் முடிவெடுக்காத 'மிதப்பு வாக்காளர்கள்' சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகச் சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் வேட்பாளர் யாரென சிந்தித்து முடிவுசெய்வார்கள் என்றும் - இறுதி நேரத்தில் அவர்கள் கூட ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிப்பர் என்றும் -

நிச்சயம் ரணில் விக்கிரமசிங் கவே ஜனாதிபதியாக வருவார் என்றும் -

அடித்துக் கூறுகிறார், இந்த ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் டபிள்யூ. எம். கருணதாஸ.

இந்தக் கருத்துக் கணிப்பு தொடர்பாக அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்று கொழும்பில் உள்ள நிப்பன் ஹோட்டலில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (க)

## வர்த்தகர் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகர், தனது காரில் பயணித்துக்கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் இருவரால் சுடப் பட்டு உயிரிழந்துள்ளார் என அம்பலாங்கொடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கண்டி மெனிக்கின்ன பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கண்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

## இறுதிப் பிரசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீருடை அங்கி ஒன்றைக்கண்டெடுத்ததையடுத்தே அவர் இறுதிபிரசாரக்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. எனினும், தொலைபேசியூடாக அவர் அக்கூட்டத்தில் வந்திருந்தோருக்கு உரையாற்றினார்.

அங்கு சீருடை கண்டெடுக்கப்பட்டமை தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. இதேவேளை, கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 3 பொலீஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளதென தமிழீழ காவல்துறையின் பரிசோதகர் பொ.பவானி மன்றில் தெரிவித்தார்.

விசாரணைகளை மேற்கொள்ள கால அவகாசம் தேவையாகவுள் ளது. மூன்று பொலீஸார் மீதான புலன்விசாரணை அறிக்கைகளை இப்போது நீதிமன்றில் சமர்பிக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

"புலன் விசாரணை என்ற பெயரில் காவல் துறையினர் பல தடவைகள் விசாரணைக்கான அவகாசத்தைக் கோரியுள்ளனர். அத்துடன், மன்றைத் திருப்திப்படுத்தும் வகையில் அறிக்கைகள் எதுவும் காவல் துறையினரால் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மூன்று பொலீஸாரையும் நீதிவான் தமது அறையில் அழைத்து விசாரணை செய்வதுடன், பிணையில் விடுவிப்பதற்கான அனுமதியையும் வழங்கவேண்டும்." - என்று பொலீஸார் சார்பில் ஆஜரான சட்டவாளர் தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதியாளர் சாதனா, மூன்று பொலீஸாரையும் விளக்கமறியலில் வைத்து விசாரிப்பதுடன் அவர்களது குற்ற வரையறைகளை இனங்கண்டு அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

எதிர்வரும் 28ஆம் திகதி அடுத்த தவணையின்போது நீதியாளர் அறையில் இவ்விடயம் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (க)

## மஹிந்தாவை ஆதரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுதான். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற சாரப்பட இருக்கும் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதென்பது கடினமான விடயமாகும்.

அனைத்து தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கிக் காணப்படும் தீர்வே முழுமையானதும், உண்மையானதுமான தீர்வாக அமையும். எனவேதான், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

தேர்தலுக்காகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதர கட்சிகளுடன், குறிப்பாக இனவாதக் கட்சிகளுடன், ஒப்பந்தம் செய்திருப்பதென்பது அவரைப் பொறுத்தவிடயம். எம்மைப் பொறுத்தவரை நாம் எமது கொள்கைகளிலும், எமது தனித்துவத்திலும் உறுதியாக இருக்கிறோம். சமஷ்டி அடிப்படையிலான - சமஷ்டி யாப்பின் கீழ் ஏற்றுக்கொள்ளக்கூடிய - அதிகாரப் பரவலாக்கல் முறைமையே தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்கப்போகிறார் என உறுதியளித்திருக்கிறார். புலிகளுடன் அவர் செய்துள்ள ஒப்பந்தம், எதிரிகளை அழிப்பதற்கான ஒப்பந்தமே. அது போர் நிறுத்த ஒப்பந்தமல்ல. தனது தனிப்பட்ட நோக்கத்திற்காகவே ரணில் விக்கிரமசிங்க யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். எனவே, புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பார் என ரணில் கூறுவதை நம்ப முடியாது.

**முக்கியமான தேர்தல்**

வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்தவரை, இது ஒரு முக்கியமான தேர்தல். யாரிடமிருந்து தமிழ் மக்கள் விடுதலை பெறுவது என்பதுதான் இன்றுள்ள முக்கிய கேள்வி. இலங்கை அரசைப் பொறுத்தவரை அது இப்போது தமிழர்களை நசுக்குவதாகவோ, அவர்களின் விடுதலையை மட்டம் தட்டுவதாகவோ இல்லை. பிரபாகரனதும், புலிகள் இயக்கத்தினதும் அழுத்தத்திற்குள்ளேயே தமிழ் மக்கள் இன்று இருக்கின்றனர்.

போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து சர்வதேச சமூகம் பிரபாகரனுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்கியது. ஜனநாயக நீரோட்டத்திற்குள் பிரபாகரன் வருவாரென சர்வதேச சமூகம் வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்து போய்விட்டது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட 400 முதல் 600 வரையானோரின் கொலைகளை போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் புலிகள் செய்தமை இதற்குப் பிரதான காரணமாகும்.

**ரணில் காரண மல்லர்**

விடுதலைப் புலிகளுடன் நான் முரண்பட்டுக் கொண்ட தற்கு ஐக்கிய தேசியக் கட்சி காரணமல்ல. ஐ.தே.க வின் சொற்படி செயற்பட்டு முரண்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமளவிற்கு நாம் முட்டாள்களல்லர். மனிதநேயமற்ற முறையில் செயற்பட்டு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கிழக்கு மாகாண மக்களை பிரபாகரன் நோக்கியதால் நாம் முரண்பட்டோம்.

இராணுவத்தினின் கட்டுப்பாட்டின் கீழும், வழிநடத்தலின் கீழும் எமது உறுப்பினர்கள் செயற்படுகிறார்கள் எனக் கூறுவதை நான் நிராகரிக்கிறேன். இது எனது பெயரை மாசுபடுத்துவதற்காகப் புலிகளால் அவிழ்த்துவிடப்படும் கதை. நாம் ஓர் அரசியல் கட்சியாக செயற்படுகிறோம். எந்தக் காரணத்திற்காகவும் நாம் இராணுவத்தினருடன் கைகோர்க்க மாட்டோம்.

- இவ்வாறு கருணா மேலும் கூறியிருக்கிறார். (க)

## வாக்களிப்பதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையாகத் தனது தமிழின விரோத நிலைப்பாட்டைக் காட்டுகின்ற பயங்கரமான ஒரு சிங்கம். ரணிலோ பதுமையாக, சாதுவாக படுத்திருக்கின்ற ஒரு விஷப்பாம்பு.

ரணில் விக்கிரமசிங்க திருக்கேதீஸ்வரத்தின் பாலாவியில் ஊறிய மட்டையல்ல. அவரும் ராஜபக்ஷவும் பௌத்த சிங்கள தமிழின விரோதக் குட்டையில் ஒன்றாக ஊறிய மட்டைகள்தான். கட்சியும் கொள்கைகளும் வேறுபட்டு நிற்கின்றனவேயன்றி இருவரும் ஒரே கொடியில் பூத்துக் காய்த்து முற்றிப் பழுத்த சுரக்காய் போன்றவர்கள். வேண்டுமானால் உருவமும் பருமனும் வேறுபடுமேயொழிய அதன் இயல்பு மாறுபட வாய்ப்பே கிடையாது. ரணிலும் மகிந்தவும் வேறுவேறு கட்சியாக இருந்தாலும் அவர்கள் இருவரையும் தமிழின விரோத மனப்பாங்கு ஒன்றாகப் பிணைத்து நிற்கிறது.

நாம் மீண்டும் ஏமாறத் தயாராக இல்லை. எமக்கென்றொரு தன்னிகரில்லாத தலைவர் இருக்கிறார். எமக்கென்றொரு தனியான நாடு இருக்கின்றது. எமக்கென்றொரு நீதி, நிர்வாகப் பொருளாதாரத் திட்டமிடல் கட்டமைப்பு இருக்கின்றது. எமக்கென்று பாதுகாப்பு படை இருக்கின்றது. பிறகு எதற்கு வேற்றுநாட்டு இனவாதிகளுக்கு எமது வாக்குகளைக் கொடுத்து துன்பத்தை விலைக்கு வாங்கவேண்டும்.

வோட்டுகளைக் கொடுத்து பெற்றுக் கொண்ட வேட்டுக்கள் இனிப்போதும். விழித்தெழுவோம், புறக்கணிப்போம் இந்தத் தேர்தலை. தேர்தல் தினத்தை துக்கதினமாக கரிநாளாக அனுஷ்டித்து சிங்களதேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் எமது உரிமைக்கான தேவையின் பரிமாணத்தை தெளிவாகப் புரியவைப்போம்.

சந்தர்ப்ப சூழ்நிலையின் கைதிகளாய் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல நேரிடின் அந்த வாக்குகளை செல்லுபடியற்றதாக்குவோம் என்றும் அதில் உள்ளது. அந்தப் பிரகடனத்தின் எஞ்சிய பகுதி பின்னர் வெளியாகும்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் உரிமைகளை நிராகரித்துவரும் சிங்களத் தலைமைக்கான தேர்தலைப் புறக்கணிப்போம்' என்ற தலைப்பில் ஒட்டப்பட்டிருந்த இந்தச் சுவரொட்டிகளின் கீழே வட்டுக்கோட்டை மக்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஒ)

## உள்ளூர் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரியொருவர் கூறினார்.

தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய அமைப்பு, ஆசிய பிராந்திய தேர்தல் கண்காணிப்புச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக இலங்கை வந்துள்ளனர்.

தேர்தல் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு கூடுதல்பட்ச பாதுகாப்பு வழங்கப்படுவதுடன், இந்த நிலையங்களுக்குச் செல்வோர் கடுமையான சோதனைக்கும் உட்படுத் தப்படவுள்ளனர்.

தேர்தல் வாக்குளை எண்ணும் பணிகள் ஆரம்பமான பின்னர் தேர்தல் பிரதிநிதிகள் எவரும் வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு வெளியே செல்வதைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## தேர்தல் வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது. நாடளாவிய ரீதியில் 4,500 உள்ளூர் கண்காணிப்பளர்களையும், வடக்கு-கிழக்கில் 17 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள 389 முறைப்பாடுகளில் பாரதூரமான சம்பவங்கள் தொடர்பானவை -134. சிறிய சம்பவங்கள் தொடர்பான -255 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்தகாலத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை வன்முறைச் சம்பவங்கள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. உதாரணமாக 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது 1,483 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 712 பாரதூரமான சம்பவங்களும் அடங்கியிருந்தன.

இம்முறை தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 3 கொலைச் சம்பவங்கள், 3 கொலை முயற்சிகள், படுகாயத்திற்குட்படுத்திய ஒரு சம்பவம், தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பான ஐந்து சம்பவங்கள், ஒரு கடத்தல் சம்பவமென தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. திருகோணமலை, திகாமடுல்ல, கொழும்பு ஆகிய இடங்களில் மேற்படி மூன்று கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.- இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பத்திரிகை மடிப்பவர்கள் தேவை**

- பத்திரிகை மடிப்பவர்கள் உடன் தேவை.
- அனுபவம் உள்ளவர்களும் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களும் பெரிதும் விரும்பப்படுவர்.
- விண்ணப்பதாரர் இன்றும் (15.11.2005), நாளையும் (16.11.2005) பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

**உதயன்**
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-46220) (25-15-46)



**மரண அறிவித்தல்**

*திருமதி*
**ஆனந்தவடிவேல் அருந்தவநாயகி**

அம்மன் வீதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தவடிவேல் அருந்தவநாயகி அவர்கள் நேற்று (14.11.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவல் பிள்ளையார் கோயிலடி வீதி,*
*திருநெல்வேலி.* (42852) (25-15-46) தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.